உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்து மாதந்தோறும் பிரசுரமாகும்
ஒரு தமிழ்ப்பத்திரிகை.

பத்திராசிரியர்.— { ரா. இராகவையங்கார்,
ஸேதுஸம்ஸ்தான வித்வான்.

எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்—திருவள்ளுவர்.

தொகுதி-௨.] குரோதிஹு ஆனிமீ [பகுதி-அ.

உள்ளுறை.

பாரிமகளிர்.—பத்திராசிரியர். ௨௬௫
பிங்கலநிகண்டு.—அ. குமாரசுவாமிப்பிள்ளை. ௨௭௬
நட்பு.—திருமணம். செல்வக்கேசவராய முதலியார் M. A. ௨அக
சந்தானக்குரவர் I.—திருமயிலை. சண்முகம் பிள்ளை. ௨அஅ
நன்னூற்குறிப்பு.—திரு. நாராயணையங்கார். ௨௯௨
திணைமாலை நூற்றைம்பது (உரை) முற்றும்.—கணிமேதாவியார். ௪௫
விவசாயநூல்.—சே. ப. நரசிம்மலு நாயடு. க
சுகசந்தர்சனதீபிகை.—பண்டித-ச. ம. நடேச சாஸ்திரியார். க
தொல்காப்பியம் செய்யுளியல்.—நச்சினார்க்கினியருரை. க

மதுரை:
தமிழ்ச்சங்க முத்திராசாலைப்
பதிப்பு.

வருஷம் ஒன்றுக்கு ரூ - 4.] 1904. [தனிப்பிரதி அணா-8.

திருச்சிற்றம்பலம்.

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் "பாண்டியன் புத்தகசாலை" க்கு அடியிற்குறித்த அபிமானசீலர்கள் கையெழுத்துப் பிரதிகளும், அச்சுப்பிரதிகளும் அனுப்பியுதவினோர்கள்.

கையெழுத்துப்பிரதிகள்.

1. திணைமாலை நூற்றைம்பதுரை
   ஐந்திணையெழுபதுரை
   கார்நாற்பதுரை
2. பன்னிருபாட்டியல் மூலம்

} ஸ்ரீமத். S. இராதாகிருஷ்ணையரவர்கள், பிரின்ஸிபால், மகாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.

3. யாப்பருங்கலக்காரிகையுரை—ஸ்ரீமத். காரை-சிவசிதம்பரையரவர்கள், யாழ்ப்பாணம்
4. தொல்காப்பியச் சொல்லதிகாரம் இளம்பூரணம்—திருமயிலைச் சண்முகம்பிள்ளையவர்கள்.
5. உப்பூர் வெயிலுகந்தவிநாயகர் புராணம்—குன்றக்குடி ஸ்ரீமத். அப்பாவுபிள்ளையவர்கள்.

ஐந்திணையெழுபது—ஸ்ரீமத். திருமணம் செல்வக்கேசவராயமுதலியாரவர்கள்.

7. குவலயானந்தமுரை—ஸ்ரீமத். பா. பு. ச. சுல்தான் அப்துல்காதிறு அவர்கள், கீழக்கரை
8. தக்ஷிணாமூர்த்திகாவியம் ஆயிரம் முதலியன
9. ,, சௌமியசாகரம்
10. ,, சகலகலைஞானம்
11. இலக்கணவிளக்கம் சொல்லதிகாரம்

} இராமநாதபுரம் ஜமீன் கைலாசமங்கலம் ஸ்ரீமத் பெரியசாமித்தேவரவர்கள்.

அச்சுப்பிரதிகள்.

1. நீதிசாரம்—மாதகல். ஸ்ரீமத் அ. ஏரம்பையரவர்கள்.

2. ஆஸ்திகமத சித்தாந்தம்
3. ஆரியர் சத்தியவேதம்
4. ஆரியராசாரமென்னுந்தரும சாஸ [திரம்
5. ஸ்ரீராமமகத்துவம்
6. அத்வைத த்வைதவிசிஷ்டாத் வைதவினாவிடை
7. பிரமசமாச அறிக்கை
8. பக்தி விஷய உபந்நியாசம்
9. சாந்தோக்கிய உபநிஷத்
10. சங்கீத சாஸ்திர சரித்திரம்
11. திருப்பதி வேங்கடேசர் மகத்துவம்
12. பிராமணவிதவா விவாகம்
13. ஆரியர் சந்தியாவந்தனம்
14. அஷ்டாக்ஷர மகத்துவம்

இவை சேலம்பகடாலஸ்ரீமத் சே.ப.நரசிம்மலு நாயடுகாரால் உதவப் பெற்றன.

1. திருப்பாதிரிப்புலியூர்ப்புராணம்
2. மருதூரந்தாதி உரை
3. மகாஜாலரகஸ்ய விளக்கம்
4. ஞான சதுஷ்டய தர்ப்பணம்
5. கோடீசுரக்கோவை
6. அரிச்சந்திரபுராணம்
7. நீதிநூல்
8. விவேக விளக்கம்
9. நீதிநூற்றிரட்டு
10. புதுவைக் கலம்பகம்
11. சோளீசர்மாலை
12. பஞ்சரத்ந கீர்த்தனை
13. சித்தாந்தப் பிரகாசிகை
14. சிவபுண்ணியத் தெளிவு

இவை, திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீமத் அதிகப்ப. வீ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களால் உதவப் பெற்றன.

இவ்வாறு சங்காபிமானத்தோடுந் தாமே முன்வந்து பிரதிகள் உதவிய இக்கனவான்களுக்கு அநேக வந்தனம் கூறுகின்றேன்.

இங்ஙனம்,
பொ. பாண்டித்துரை,
அக்கிராசனாதிபதி.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-உ,] குரோதி௵ ஆனிமீ [பகுதி-அ.

பாரி மகளிர்.

பாரி என்பான், தமிழ்நாட்டுப்பண்டைக்காலத்தே பெரும்புகழ் பெற்று விளங்கிய வள்ளல்கள் எழுவருள் தலைமை வாய்ந்தவன். வேளென்னும் பட்டம் பெற்ற உழுவித்துண்போர் வகையினன்: கொடையிற் சிறந்த எவ்வி என்பவனுடைய தொல்குடியிற் பிறந்தோன்: செல்வமிக்க முந்நூறு ஊர்களையுடைய பறம்புநாட்டுக்குத் தலைவன்: இவனது பறம்புநாடு பறநாடு எனவும் வழங்கப்படும்: "பாரிபறநாட்டுப் பெண்டி ரடி" எனவும், 'பறநாட்டுப் பெருங்கொற்றனார்' எனவும் வழங்குவது காண்க. இவன் பறம்பு என்னும்பெயரையுடைய வளமலைக்கண் வலியுடையதோர் பேராணமைத்து அதனைத் தன் அரசிருக்கையாக்கி அதன்பாற் சிறக்கவீற்றிருந்தோன். இவனது மலையரண் பெரிய அழகும் அரியகாவலும் உடையது (நற்றிணை-உருஎ) எனவும், பகைவர் முற்றியகாலத்தும், வறங்கூர்ந்த காலத்தும் தன்னகத்து வாழ்வார் இனிதுண்டு செருக்குதற்கு உரிய மூங்கினெல்லும், பலாப்பழமும், வள்ளிக்கிழங்கும், நறுந்தேனும், தன்பால் மிக்கது (புறம்-க0௯) எனவும், என்றும் வற்றுததும், பேரினிமை பயப்பதுமாகிய குளிர்ந்த நீரையுடைய பைஞ்சுனையொன்று தன்கணுடையது (அகம்-எஅ, குறுந்தொகை-கக௯) எனவும் சான்றோர் கூறுவர். இப்பறம்பு பாண்டிநாட்டதென்பது "வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே" (௯௪) என்னும் பாண்டிமண்டல சதகத்தாற் புலப்படுவது. இப்பாரி "உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை, வாய்மொழிக் கபிலன்" (அகம்-எஅ) என நல்லிசைப் புலவ

ர்களால் மேம்படுத்தேத்தப்பட்ட கபிலரென்னும் புலவர்தலைவர்க்கு உயிர்த்தோழனானவன்.(புறம்-௨0௧) "புலங்கந் தாக விரவலர் செலினே, வரைபுரை களிற்றொடு நன்கலனீயு, முரைசால்வண்புகழ்ப் பாரி" (அகம்-௩0௩)என ஔவையார் பாடுதலால் இவன் அவராலும் பேரன்புபாராட்டப்பட்டவனென்பதுபுலனும். இவன் நிழலில்லாத நீண்டவழியிற் றனிமரம்போலநின்று தன்னையடைந்த அறிஞர், மடவர், வலியர், மெலியர்யாவர்க்கும் இன்னருள்சுரந்துமூவேந்தரினுமிகுத்து நன்குவழங்கிய வள்ளியோன். இவனதுபெருங்கொடைக்குக் கபிலர் மாரியினையே பல்லிடத்தும் உவமை கூறுவர். 'மாரிவண்பாரி' (பதிற்றுப்பத்து-எ-க) "பாரியொருவனுமல்லன், மாரியுமுண்டீண்டுலகு புரப் பதுவே" (புறம்-க0எ) என வருவனவற்றானுணர்க. இவன் ஒருநாள் பொற்றேரூர்ந்து ஓர் காட்டிற் செல்லும்போது முல்லைக் கொடியொன்று படர்தற்குக் கொம்பரின்றி வெற்றிடையிலெழுந்து காற்றால் தளர்ந்து நடுங்குவதுகண்டு, அவ்வோரறிவுயிர்மாட்டும் உண்டாகிய பேரருளால் அஃதினிதுபடருமாறு தனது பொற்றேரை அதன்பக்கத்திட்டுத் தன்னிணையடிசிவப்ப நடந்துபோயினனென்ப. இவ்வரியபெரிய வள்ளன்மையே "பூத்தலை யறாஅப் புனைகொடி முல்லை, நாத்தழும் பிருப்பப் பாடா தாயினுங், கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக் கொடுத்த, பரந்தோங்கு சிறப்பிற் பாரி" (புறம்-௨00)'ஊருட னிரவலர்க் கருளித் தேருடன், முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப், படுமணி யானைப் பறம்பிற் கோமா, னெடுமாப் பாரி' (ஷை-௨0௧) "சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய......பறம்பிற் கோமான் பாரி" (சிறுபாணாற்றுப்படை) "முல்லைக்குத் தேரும்......தொல்லை யிரவாம லீந்த விறைவர்" (வெண்பாமாலை, பாடாண், ௩) என்பனவற்றாற் பாராட்டப்படுவது. தன்னரசிருக்கையாகிய பறம்புமலையொழியத் தன்னாட்டு முந்நூறூர்களையும் இரவலர்க்கே அளித்தனனென்று கபிலர் கூறுவர். 'முந்நூறூர்த்தே தண்புறம்பு நன்னாடு, முந்நூறூரும் பரிசிலர் பெற்றனர்' (புறம் கக0) என்பதனானுணர்க. இவனது வரையாவண்மை "கொடுக்கிலாதானைப்பாரியேயென்று கூறினுங்கொடுப்பாரிலை"(தேவாரம்) என்பதனாற் சைவசமயாசாரியராகிய சுந்தரமூர்த்தி நாயனாராலும் எடுத்தாளப்பட்ட தென்பதொன்றானே இவனது வள்ளற்றலைமை தெள்ளிதி

னுணரப்படும். இங்ஙனம் மாரிபோன்ற வரையாவீகையால், இவன் யாரினுஞ் சிறக்கவிளைத்த பெரும்புகழ்க்கு அழுக்சாறு கொண்டு தமிழ் மூவேந்தரும் ஒருங்குகூடிப் படையெடுத்துப்போய் இவனது பறம்பாகிய மலையரணை நெடுங்காலம் முற்ற, அதனால் அவ்வரண் அடைமதிற்பட்டதாகப், பாரிக்குயிர்த்துணைவராய் அக்காலத்தும் அங்கிருந்த கபிலரென்னும் புலவர்பெருமான் கிளிகளை வளர்த்து விடுத்து, அரணுக்கு அப்புறத்து விளைநிலங்களிலுள்ள நெற்கதிர்களை நாளுங்கொணரச்செய்து ஆண்டுள்ள குடிபடைகளை அருத்திப் போராற்றளராவண்ணம்புரிந்து பாதுகாத்துவந்தனர். இவ்வரிய கதை,

"உலகுடன் றிரிதரும் பலர்புகழ் நல்லிசை
வாய்மொழிக் கபிலன் சூழச் சேய்நின்று
செழுஞ்செந் நெல்லின் விளைகதிர் கொண்டு
நெடுந்தா ளாம்பன் மலரொடு கூட்டி
யாண்டுபல கழிய வேண்டுவயிற் பிழையா
தாளிடூஉக் கடந்து வாளம ருழக்கி
யேந்துகோட் டியானை வேந்த ரோட்டிய
கடும்பரிப் புரவிக் கைவண் பாரி
தீம்பெரும் பைஞ்சுனைப் பூத்த
தேங்கமழ் புதுமலர் நாறுமிவ ணுதலே."

எனவரும் அகப்பாட்டானும் (எஅ) "இதனுட் கபிலன்சூழ என்றது அரசர் மூவரும் வளைத்திருப்ப அகப்பட்டிருந்து, உணவில்லாமைக் கிளிகளை வளர்த்துக் கதிர்கொண்டு வரவிட்டகதை" எனவரும் அதனுரையானும் அறியப்படுவது. இதுவே,

"உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பி
னிரைபறைக் குரீஇயினங் காலைப் போகி
முடங்குபுறச் செந்நெற் றரீஇய ரோராங்
கிரைதேர் கொட்பின வாகிப் பொழுதுபடப்
படர்கொண் மாலைப் படர்தந் தாங்கு." (அகம்-௩0௩)

என்பதனால் ஔவையாரானும் எடுத்துக்கூறப்பட்டதாகும். பின் கபிலர் பறம்புமுற்றிய மூவேந்தரையும் நோக்கி 'நீவிர் முத்திறத்தீரும் ஒருங்குகூடித் தானை, யானை, குதிரை முதலிய படைகொண்டு எத்துணையோகாலம் முற்றிப்பொருநீராயினும், இப்பாரியுடைய

பறம்பு கொள்ளுதலரிது; இவனது முந்நூறூரும் இவன்பாற் பாடிப்பெற்ற பரிசிலர்போல நீவிரும் பாடினராய்வரின் கொள்ளுத லெளிது" என்று இவனது புரவலர்க்கருமையும், இரவலர்க்கெளிமை யுமாகிய பெருநிலையைத் தம்மினிய பாடலானறிவிக்க (புறம், ௧௧0), அதனால் மூவேந்தரும் இவனை எதிர்த்துவெல்லுதல் அரிதென்பதோ ர்ந்து இவனோடு பொருதற்கஞ்சி ஓடினரென்ப. மேல் "ஏந்துகோட் டியானை வேந்தரோட்டிய, கடும்பரிப் புரவிக் கைவண் பாரி" என்ப தனால், இவன் அம்மூவேந்தரையும் வென்றோட்டியமை நன்குபுலப் படும். இதன்பின் மூவேந்தரும் ஒருங்குகூடி வேறோர் சூழ்ச்சிசெ ய்து பாரியை வஞ்சித்துக் கொன்றனர். இதனை-௧௧உ ஆம்புறப் பாட்டுரையில் "ஒருவனை மூவேந்தரும் முற்றியிருந்தும் வஞ்சித்துக் கொன்றமையின்" எனவருதலானறிக.

"பாரியும் பரிசில ரிரப்பின்
வாரே னென்னா னவர்வரை யன்னே." (புறம், ௧0அ)

எனக் கபிலர் இப்பாரியினியல்புகூறுதலான், இவ்வேந்தர் மூவரும் அவனியல்புக்குத்தகப் பரிசிலர்வேடம் பூண்டோ, பிறரைப்பரிசில ராகவிடுத்தோ, இவனை இரந்து தம்மகப்படுத்திக் கொன்றனராவர். இக்கருத்து,

புரிசைப் புறத்தினிற் *சேரனுஞ் சோழனும் போர்புரிய
விரியச் சயங்கொண்ட போழ்தினில் யாமினி யீங்கிவனைப்
பரிசுக்கு நல்ல கவிபாடி யூல்வரும் பாக்யமென்றே
வரிசைத் தமிழ்புனை பாரியும் பாண்டியன் மண்டலமே.

என்னும் பாண்டிமண்டல சதகச்செய்யுளினும் (௬௪) பயில்வது காண்க.

இவ்வாறு புரவலர்க்கின்னானாய் இரவலர்க்கினியனாய் விளங்கிய நல்லிசைவள்ளலான மாரியனையபாரியின் அருமைப்புதல்வியர்தாம், யாமீண்டெடுத்தோதப்புக்க 'நல்லிசைப்புலமைமெல்லியன்மகளிர். இம்மகளிர் வரலாறு பெரும்பாலும் ஔவையார் வரலாற்றுட்கூறப்

* இந்நூலுடையார் பாண்டிமண்டலச்சிறப்பேகூறுதலான் பாண்டிய னும் அப்போரில் இரிந்தோடினனெனக்கூறவுடம்பட்டாரில்லைப்போலும்.

பட்டதாகும். ஆங்குக்கூறியன தொகுத்தும், கூறுதனவிரித்தும் ஈண்டுணர்த்துகின்றேன்.

மேலுரைத்தவாறு பாரியிறந்தபின்னர் அவனதின்னுயிர்த்தோழராகிய கபிலர், பாரியை நீத்துத் தமித்துயிர்வாழ்தற்கு மனமிலராயினும், அவனுடையஅறிவுடைமகளிரைக் காத்தற்கு வேறொருவருமிலராதல்பற்றி உயிர்கொடுநின்று, அம்மகளிர்க்குத்தக்க அறிவும் பெருமையுமுடைய கணவரைத் தேடநினைந்து, அவர்களுடன், அவர்கட்குந் தமக்கும் பேரன்புமிக்க பறம்பினை விடமுடியாமேவிடுத்து, அப்பாரியை நினையுந்தோறும் பறம்பினைத் திரும்பிநோக்குந்தோறும் உள்ளம் நெக்குநெக்குருகிக் கண்ணீர் வாரநின்று ஆற்றொணுத்துயராற் பொங்கியெழுந்த அன்புடைப்பாடல்களாற் பாரியினையும் பறம்பினையும் புகழ்ந்துகொண்டே சென்று ஓரூரிற்றங்கினர். அங்கு அன்றிரவு நிலாத்தோன்றியபோது அவருடனிருந்த பாரியினருமைமகளிர், தாம் இதற்கு முந்திய நிலாக்காலத்துத் தமது அரசுநிலையிட்ட திருவுடைநகர்க்கண்ணே இனிதுமகிழ்ந்து விளையாடியதும், அடுத்த இந்நிலாக்காலத்துத் தாம் தந்தையிழந்து தண்பறம்பிழந்து தமியராய்த் துச்சிலொதுங்கித் துயர்கூரநின்றதும் தம்முள்ளத்தே தோன்ற, அப்போது,

"அற்றைத் திங்க ளவ்வெண் ணிலவி
னெந்தையு முடையேமெங் குன்றும் பிறர்கொளா
ரிற்றைத் திங்க ளிவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெங்
குன்றுங் கொண்டார்யா மெந்தையு மிலமே" (புறம்-ககஉ)

என்னும் பாடலைப்பாடினர். இப்பாட்டால், இச்செய்யுள் செய்தற்கு ஒருமாதத்துக்குமுன், பாரி தன்னரசிருக்கையாகிய பறம்பின்கண் தம்மகளிர்முதலியோருடன் இருந்து வாழ்ந்திருந்தனனென்பது புலப்படுவது. இப்பாடல் சங்கத்தாராற் றொகுக்கப்பட்ட புறநானூற்றிலொன்ருகக் காணப்பட்டவாற்றால், இம்மகளிர் நல்லிசைப்புலவராதல் உணரப்படும். பாரிமகளிர் இருவர் என்பது மேலே தேறப்படுமாதலின், ஈண்டும் 'பாரிமகளிர் பாடியது' எனப்பொதுப்படக் கூறப்பட்டமைபற்றி அவ்விருவருமே செந்தமிழ்ப் புலமை

யாற் சிறந்தாராவரென்பதுந் தெளியலாகும். புலவரிருவர் சேர்ந்து ஒரு பாடல் பாடுவது முன்வழக்கே. இம்மகளிரது இன்றமிழ்ப்புலமை, தமதரும்பெறற்றந்தையாகிய வள்ளற்பாரிக்கு ஆருயிர்த்தோழராகிய கபிலரென்னும் புலவர்தலைவர்பாற் பெற்றதாகும். இதன்மேற் கபிலர் அவ்வூரைவிடுத்து இளவிச்சிக்கோ என்பானிடஞ் சென்று இம்மகளிரது உயர்குடிப்பிறப்பு முதலியவற்றை எடுத்துரைத்து இவர்களை மணஞ்செய்து கொள்ளும்படி அவனைப்பாடி வேண்ட, அவனுடம்படாமையால் இருங்கோவேளென்பானுழைச் சென்று அவனையும் அவ்வாறுவேண்ட, அவனும் அங்ஙனமே உடம்படானாய் மறுக்க இதற்காக அவனை முனிந்துபாடி, பாரிகுடிக்கும் மூவேந்தர்க்கு முண்டாகிய பகைமைபற்றி அரசரொருவரும் இவர்களை மணஞ்செய்துகொள்ள இயையாமையாற் கபிலர் அம்மகளிரைத் தமக்கினிய பார்ப்பார்சிலர்பாற்படுத்துப் பாரியின்பிரிவாற்றாது வடக்கிருப்பாராயினர். இதற்கிடையிற் கபிலர் செல்வக்கடுங்கோவாழியாதனென்னும் சேரமான்பாற்சென்று அவனைப் பத்துப்பாடல்களாற் புகழ்ந்துபாடி, நூறாயிரங்காணமும் அவன்மலையேறிக் கண்டு கொடுத்த நாடும் அவன்பாற் பெற்றனர் எனத்தெரிவது. இதுவே பதிற்றுப்பத்தினுள் ஏழாம் பத்தாவது. இவர் பாரி இறந்தபின்னேதான் அவனதுநற்குணநற்செயல்கள் செல்வக்கடுங்கோவாழியாதனிடமும் இருப்பனவாகக் கேட்டு அவனைக் காணச்சென்றனராவர். இதனை,

“பலாஅம் பழுத்த பசும்புண் ணரியல்
வாடை தூக்கு நாடுகெழு பெருவிற
லோவத் தன்ன வினைபுனை நல்லிற்
பாவை யன்ன நல்லோள் கணவன்
பொன்னி னன்ன பூவிற் பசியிலைப்
புன்கா லுன்னத்துப் பகைவ னெங்கோப்
புலர்ந்த சாந்திற் புலரா வீகை
மலர்ந்த மார்பின் மாரிவண் பாரி
முழவுமண் புலரா விரவல ரினைய
வாராச் சேட்புலம் படர்ந்தோ னளிக்கென
விரக்கு வாரே னெஞ்சிக் கூறே
னீத்த திரங்கா னீத்தொறு மகிழா

னமரா வள்ளிய னென்ன நுவலுநின்
னல்லிசை தரவந் திசினே"

என்னும் பதிற்றுப்பத்தானும், (எ-ம்பத்து, க,) "படர்ந்தோன் என்பது முற்று. அளிக்கென என்பது நீ யெம்மை அளிப்பாயாக எனச்சொல்லி என்றவாறு. இரக்கு என்பது தன்வினை. எஞ்சிக்கூறேனென்பது உண்மையினெல்லையைக் கடந்து பொய்யே புகழ்ந்து சொல்லேன் என்றவாறு. யான், பாரிசெட்புலம் படர்ந்தான்: நீ எம்மையளிக்க: எனச்சொல்லி இரக்கவென்று வந்து சில புகழ்ந்து சொல்கின்றேனுமல்லேன்; அஃதன்றி யான் உண்மையொழியப் புகழ்ந்து சொல்கின்றேனுமல்லேன்; ஈத்ததிரங்காமை முதலாகிய பாரி நற்குணங்களை நின்பாலுளவாக உலகஞ்சொல்லும்நின்புகழ் நின்பாலேதரவந்தேன்" என்னும் அதனுரையானும் உணர்ந்துகொள்க. சேரன்பால் இவர் சென்ற காலத்தும் இப்பாரி மகளிரும் உடனிருந்தனர் போலும். இம்மகளிர் வரலாற்றினைப் புறநானூறொன்றே துணையாக்கொண்டு ஆராயின் அதன் கண்,

(க) "அற்றைத் திங்கள்.........மிலமே (புறம், ககஉ)

இது பாரிமகளிர் பாடியது.

(உ) "சேறும் வாழியோ பெரும்பெயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (ஷை, ககங)

"இஃது அவன்(பாரி)மகளிரைப் பார்ப்பார்ப் படுக்சக் கொண்டுபோவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியது."

(ங) "ஈண்டுநின்......... நெடியோன் குன்றே" (ஷை, ககச)

"அவன் மகளிரைக் கொண்டுபோங் கபிலர் பறம்பு நோக்கி நின்று சொல்லியது"

(ச) "இவரே.........பாரிமகளிர்
யானே, பரிசிலன் மன்னு மந்தணன்
நீயே, வரிசையில் வணக்கும் வாண்மேம் படுந
னினக்கியான் கொடுப்பக் கொண்மதி" (ஷை, உ00)

இது பாரிமகளிரை விச்சிக்கோனுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

(ரு) "இவர்..........பாரிமகளிர் யானே
தந்தை தோழ னிவரென் மகளிர்
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே (ஷை, உ0க)

இது பாரிமகளிரை இருங்கோவேளுழைக் கொண்டுசென்ற கபிலர் பாடியது.

(சு) "எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
றேற்றுப் புன்சொ ஞேற்றிசிற் பெரும (ஷை, உ0உ)

இருங்கோவேள் பாரிமகளிரைக் கொள்ளானாகக் கபிலர் பாடியது.

(எ) "கலையுணக்............பாலே (ஷை, உ௩சு)

வேள்பாரி துஞ்சியவழி மகளிரைப் பார்ப்பார்ப்படுத்து வடக்கிருந்த கபிலர் பாடியது."

என வருவனவற்றாற் பாரிமகளிர் ஒருசிலரென்பதும், அவர் பாடவல்லவரென்பதும், அப்பாரி இறந்தபின் அவனது தோழராகிய கபிலரென்னும் புலவரந்தணரால் இளவிச்சிக்கோ, இருங்கோவேளென்னும் அரசரிடம் தம்மை மணஞ்செய்து கொள்ளும்படி வேண்டப்பட்டனரென்பதும், அவ்வரசர் அதற்குடம்படாமையாற் கபிலராற் பார்ப்பார்ப்படுக்கப்பட்டனரென்பதும், இவரைப் பார்ப்பார்ப் படுத்தபின் கபிலர் பாரிபிரிவாற்றாது வடக்கிருந்தனரென்பதும் அறியப்படும். இனித் தமிழ்நாவலர்சரிதையினையும் துணைக்கொண்டு நோக்கின்,

"சேரலர்கோன் சேரன் செழும்பூந் திருக்கோவ
லூரளவுந் தான்வருக வுட்காதே—பாரிமக
ளங்கவையைக் கொள்ள வரசன் மனமியைந்தான்
சங்கியா தேவருக தான்"

என்பன முதலாக மேல் ஒளவையார் வரலாற்றுள் எடுத்துக் காட்டிய பாடல்களானும், பிறவற்றானும் அப்பாரிமகளிர் அங்கவ

சங்கவை என்பாரிருவரென்பதும், அவர் திருக்கோவலூரில் இருந்தனரென்பதும், அவ்வூரில் தெய்வீகனென்னும் அரசனுக்கு, மூவேந்தர்நடுவில் ஔவையாருடைய நன்முயற்சியாற் சிறக்க மணஞ்செய்து கொடுக்கப்பட்டனரென்பதும், பிறவும் புலனாகும். இத்தமிழ்நாவலர்சரிதைப் பாட்டுள் "பாரிமகள், அங்கவையைக் கொள்ள அரசன் மனமியைந்தான்" என்பது, முன்அரசர்சிலர் இம்மகளிரைக் கொள்ள மனமியையாமை குறிப்பதாம். இதன் விரிவெல்லாம் ஔவையார் வரலாற்றுட் காண்க.

இங்ஙனமன்றிப் 'பார்ப்பார்ப்படுத்தல்' என்பது, பார்ப்பார்க்கு மணஞ்செய்யப்பட்டமையேயாம்: என்னை? "குறுந்தொடி மகளிர், நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" (புறம், கக௩) எனமேல் வந்தது, பாரிமகளிரைப் பார்ப்பார்ப் படுக்கக்கொண்டுபோவான் பறம்புவிடுத்த கபிலர் பாடியதாதலான் எனின்;—கூறுவேன்; கபிலர் பறம்பினைவிடுத்தபோதே இம்மகளிரைப் பார்ப்பார்ப் படுக்கக் கருதினாராயின், இளவிச்சிக்கோ, இருங்கோவேளென்பாரிடம் இவரை மணஞ்செய்துகொள்ள வேண்டார். இவ்வரசர்பாற் சென்று வேண்ட அவருடம்படாத பின்னேதான் கபிலர்க்குப் பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுக்குமெண்ணம் உண்டாயிருத்தலாகும். அதன் பின்னரே பார்ப்பார்ப்படுத்தனராவர். இம்முடிவு நிகழ்ச்சியை உட்கொண்டு, பிற்காலத்துச் செய்யுட்டொகை செய்தார், பறம்புவிடுத்தது முதலும் பார்ப்பார்ப்படுத்தது இறுதியுமாக இவர்கள் செய்திநிகழ்தலின் இடையினிகழ்ந்தனவெல்லாங்கூறாமல் இறுதியிற் 'பார்ப்பார்ப்படுக்கக்கொண்டுபோவான்' என்பதே குறித்துக்கொண்டார். "நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே" எனப் பாட்டுட்கூறப்பட்டிருத்தலால் இம்மகளிர் மணத்தற்குத்தக்க ஒருகுலக்கணவரைத் தேடுதலே பறம்புவிடுக்கும்போது கபிலர்க்குளதாகிய எண்ணமென்பது நன்கு புலனாம்: நாறிருங்கூந்தற்கணவர் பார்ப்பாரே என முதற்கட் கருதினாரெனின்;— பார்ப்பார்ப்படுத்தற்குமுன் இளவிச்சிக்கோ, இருங்கோவேளென்னும் வேளிரிடஞ் சென்று வேண்டல் பொருந்தாதாகும்: இம்மகளிர் வேளிர்குலக்கொடிகளாதலால் அக்குலத்து நல்லாண்மக்களையே தேடிச்சென்றனரென்பது தெள்

ளிது. ஆதலால், 'நாறிருங்கூந்தற்......கிழவரைப்படர்ந்தே' என்பதற்குக் கீழ்க்குறிப்பே துணையாகக்கொண்டு, பார்ப்பார்க்குமணஞ் செய்யப்பட்டனரென்றல் இயையாமை காண்க. இனிப் பார்ப்பார்ப் படுத்தனரென்பதுதானே, பார்ப்பார்க்கு மணஞ் செய்யப்பட்டனரென்பதுணர்த்துமெனின் ;— அது "பாரிமக ளங்கவையைக் கொள்ளவரசன் மனமியைந்தான்" என்னும் ஔவையார் பாட்டோடு மாறுகொள்ளும். இவற்றாற் 'கபிலர் பாரிமகளிரைப் பார்ப்பார்ப்படுத்தனர்' என்பது அவர் அம்மகளிரை அரசரொருவரும் மணஞ்செய்து கொள்ளாமையால் தமக்கினிய பார்ப்பார்சிலரது பாதுகாப்பில் வைத்தமையே குறிக்கும். அன்றியும், பார்ப்பார்க்கும் வேளிர்க்கும் மணநிகழ்ச்சி கூறுதலும் இயையாதாம். கபிலர், மகளிரை அரசர்க்கு மணஞ்செய்யலாகாமற் பார்ப்பாரது பாதுகாப்பில் வைத்து வடக்கிருக்க, ஔவையார் அது தெரிந்து தெய்வீகன் என்னும் அரசனை, இம்மகளிரை மணஞ்செய்துகொள்ளும்படி உடம்படுவித்து அவர் மணத்தைச் சிறப்ப வியற்றினர் என்பதே இயைபுடைத்தாவது காண்க.

இம்மகளிர் புலவர் பேரணியாங் கபிலரந்தணர்பாற் பயின்றமைக்கேற்ற நல்லிசைப்புலமையேயன்றி, வரையா வள்ளியோனாகிய பாரிமகளிர் என்றற்கேற்ற வள்ளற்றன்மையுமுடையராயினரென்பது,

"மாரியொன் றின்றி வறந்திருந்த காலத்தும்
பாரி மடமகள் பாண்மகற்கு—நீருலையுட்
பொன்றந்து கொண்டு * புகாவாக நல்கினாளொன்றாரு முன்றிலோ வில்"

என்னும் பழமொழிச் செய்யுளானும் (கஎக) "மாரி யென்பதொன் றின்றி உலகம்வற்றியிருந்தகாலத்தும் பாரிமடமகளிர் இரந்து

* புகா என்பது உணவு. "புகாக் காலைப் புக்கெதிர்ப் பட்டுழிப், பகா விருந்தின் பகுதிக் கண்ணும்" என்னுந் தொல்காப்பியத்து (களஎ, கசு). நச்சினார்க்கினியர் 'புகாக்காலை', என்பதற்கு 'உண்டிக்காலத்து' என உரை கூறியவாற்றானுணர்க: "புகாவலைவில்லங்காய்" என வளையாபதியினும் (புறத்திரட்டு, புலான்மறுத்தல், எ) வருதல் காண்க. இது, நிலா நிலவு என வருதல் போலப் 'புகவு' எனவும் வரும் ; "அகநாட் டண்ணல் புகவே" என்பது புறம் (உசக).

வந்தானொரு பாண்மகற்குச் சோறுபெறுமையால் உலையுட் பொன்னைப்பெய்துகொண்டு திறந்து சோறாகவே நல்கினுளாதலால், ஒரு துன்பமுறாத மனையில்லை என்றவாறு. அல்லதூஉம் சோறும் அரிதாகியகாலத்துப் பொன்னேசோறாக உதவினுளாதலாற் சென்றிரந்தால் ஒருபயன்படாத மனையில்லை என்றவாறு." என்னும் அதனுரையானும் அறியப்படும்.

முன்னரே ஔவையாரது வரலாற்றுள் இம்மகளிரது திருமணச்சிறப்பு முதலியன கூறப்பட்டனவாதலான், ஈண்டு வேறெடுத்தோதினேனில்லை. அதனால் ஔவையாரென்னும் அறிவுடையாட்டி இம்மகளிர்பால் வைத்த பேரன்பு நன்குணரப்படும்.

இத்துணையுங் கூறியவாற்றால், புவிநிறைபெரும்புகழ்க் கபிலரௌவை அன்புபாராட்டுமின்புடைப் பாரியினருமைமகளிர் பெருமையுங் கல்வியும் ஒருவாறுணர்க.

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

குறிப்பு:— ஔவையார்வரலாற்றுட்(செந்தமிழ்த்தொகுதி-உ பகுதி-எ, பக்கம்-உ௨௬) "ஒன்றாகக் காண்பதே" என்னும் வெண்பாவினுள் இரண்டாமடி "வென்றான்றன் வீரமே வீரமென்றானும்" எனவிருப்பதை "வென்றான்றன் வீரமே வீரமா—மென்றானும்" எனவும், ஷ உ௩௦-ம்பக்கத்துத் "தண்ணீருங் காவிரியே" என்னும் வெண்பாவின் மூன்றாமடி "அம்பர்ச்சிலம்பியரவிந்தத் தாளணியுஞ்" என்பதனை "அம்பர்ச்சிலம்பி யரவிந்த மேமலராஞ்" எனவும், ஷ உ௩உம் பக்கத்து இரண்டாம் வரியில் "ஒன்றானுஞ் சாசாமற் கற்பதே கல்வி" என்பதனை "என்றானுஞ் சாகாமற் கற்பதே கல்வி" எனவுந் திருத்திக்கொள்க.

"தண்ணீர் விரவுங் காவேரி தார்வேந் தனுமே தகுஞ்சோழன்
பெண்ணா னவளம் பர்ச்சிலம்பி பிறங்கு மலையு மேருவென்றே
யெண்ணா ரௌவை யுரைத்தபுகழ் யேழு புவியி லெண்டிசையின்
மண்ணா வதுதண் டலைவேலி வளஞ்சேர் சோழ மண்டலமே.

என்னுஞ் சோழமண்டலசதகச் செய்யுளால் "தண்ணீருங்காவிரியே" என்னும் வெண்பாவிற்குப் பொருளுணர்ந்துகொள்க.

ரா. இராகவையங்கார்,

பத்திராசிரியர்.

பிங்கல நிகண்டு.

தமிழ்ப்பாஷையிலுள்ள நூல்களெல்லாம் திரிசொற்கள் பெரிதும் அமைத்துச் செய்யப்பட்ட செய்யுள்வடிவமாக இருக்கின்றன. கத்தியம் எனப்படும் வாக்கியவடிவமாகச் செய்யப்பட்டிருக்கும் நூல்களைக் காண்டலரிது. திரிசொற்களின் பொருள்களெல்லாம் நிகண்டு நூற்பயிற்சியுடையார்க்கு எளிதிற் புலப்படுவனவாகும். நிகண்டு நூற் பயிற்சியில்லார் நூற்பொருளுணர்ச்சியிலே சித்திபெறுதற்கு உரியராகார். தமிழ்ப்பாஷையிலே திவாகரம், பிங்கலம், கயாகரம், உரிச்சொல், ஆசிரியம், சூடாமணி முதலியனவாகப் பலநிகண்டுகளிருக்கின்றன. இப்போது பெரும்பாலாரால் ஈண்டு வழங்கப்படுவன;—திவாகரம், பிங்கலம், உரிச்சொல், சூடாமணி என்னும் இவைகளேயாம். இவையெல்லாவற்றுள்ளும் சொற்களை அதிகமுடையதாய்ச் சிறந்து விளங்குவது பிங்கலநிகண்டேயாம்.

பாரதம், இராமாயணம், இரகுவமிசம், கந்தபுராணம் முதலிய நூல்களிலே வரும் எத்தனையோ திரிசொற்கள் இப்பிங்கலநிகண்டினுல் அறியப்படுவனவாகும். அவை, சூடாமணிநிகண்டு முதலியவைகளிலே காணப்படமாட்டா. "பெருக்காளர் முதலாய பெருங்குலத்தோர்" (பாரத. சிறப்புப்பாயிர. உஉ) "கடைகாவலர் குறைகூறலும்" (பாரத. அருச்சுன. ௩) பெருக்காளர்=வேளாளர். கடைகாவலர்=வாயிற்காவலோர். "புள்ளிமால்வரை பொன்னெனநோக்கி" (இராமா. ஆற்று. ச) "ஒய்யவொருகதியினேடு" (இராமா. மூலபல. கசுசு) "சிலுகில் வீழாதுலகுய்ய" (இராமா. அசுவ. கOச) புள்ளிமலை=இமயமலை. ஒய்யல்=செலுத்துதல். சிலுகு=துன்பம். "ஆளானமதிற்பிணிப்புண்டு", (இரகுவமி. குறை. ருரு) பாண்பலார்பதம்" (இரகு. இரகு. சக) ஆளானம்=யானைகட்டுந்தறி. ஆர்பதம்—வண்டு. "வார்துளிதலைஇய பின்றை" (கந்தபுராண. இந்திரனரு. கரு) "கண்டுதியாற்றுதவர் விண்ணிடைக்கங்கைபுக்கார்" (கந்தபுரா. முதனாள். கஅஅ) "பாரிவட்டமு மாதிரவட்டமும்" (கந்தபுரா.

முதனுள். உ௪ச) தலைபல்—மழைபெய்துவிடுதல். கண்டூதி—சொறி. பாரி—பூமி. இங்கே காட்டப்பட்ட பெருக்காளர் முதலிய சொற்களும் இன்னோரன்ன பிறசொற்களும் பிங்கலநிகண்டிலே காணப்படுகின்றன.

சூடாமணிநிகண்டு, ஆசிரியநிகண்டு முதலியவைகளுக்கும் இப்பிங்கலநிகண்டும் முதனூலாகக் கொள்ளப்பட்டது. நன்னூலாரும் உரியியலினிறுதியிலெ "பிங்கலமுதலா நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே" என்றார். இப்பிங்கல நிகண்டிலே சொல்லப்பட்டுள்ள சொற்களுள்ளே பெரும்பாலன வடசொற்கள். இப்போது அச்சிடப்பட்ட பிங்கலநிகண்டுப் பிரதியிலே எத்தனையோ சொற்கள் சுவரூபந் திரிந்து பிழைப்பட்டிருக்கின்றன. இங்ஙனம் பிழைப்படுமாயின்; செந்தமிழுணர்ச்சி எங்ஙனம் சித்திக்கும்! செந்தமிழ்கற்போருக்கு உபயோகமாக அவற்றுள்ளே பல இங்கே காட்டுதும்.

பிங்கலநிகண்டிலே முதலாவதாகிய வான்வகையிலே தக்கிணம், யாமியம், உதவகன், தக்கிணாக்கினி, பாதம், சீகரம், சருவரி என்னுஞ்சொற்கள் முறையே தக்கணம், யாமினியம், உதகவன், தக்கணாக்கினி, பதம், சிகரம், கருவரி என்று கொளப்பட்டுப் பிழைப்பட்டன. தக்கிணம் (தக்ஷிண)=தெற்கு. யாமியம்-தெற்கு. உதவகன் (ஹுதவஹ)=நெருப்பு. ''பஞ்சாயுதவகன்போல்'' என்பது நல்லவெண்பா. பாதம் (பாத)=நீர்; "பாதத்தில் வீழ்வதோ" என்பது பாரதம். சீகரம்-துளி. சருவரி (ஶர்வரீ)=இருள்.

இரண்டாவதாகிய வானவர் வகையிலே அரிந்தமன், ஆபன், அநிலன், பிருகற்பதி, இரித்தை, இடையுவா, கிரீட்டுமம் என்னுஞ்சொற்கள் முறையே அருந்தமன், ஆபச்சைவன், அணிலன், பிரகற்பதி, இருத்தை, இடை, உவா, கிரீடம் என்பனவாய் வேறுபட்டன. அரிந்தமன் (அரிந்தம)=விட்டுணு: பகைவனையடக்குவோன் எனப்பொருள்படும். "அரிந்தமன்சேனை" என்பது இராமாயணம். ஆபன்-ஒருவசு. அநிலன்-ஒருவசு. "ஆபன்வேற்றுருவனற்சோமன்-றிங்களங்கவிதைத் தரனுய ரநில னநலன்மெய் தெளிபிரத் தியூடன்-றுங்கவேற் பிரபாசநனென வெடுத்துரைப்பர்" என்பது கூர்மபுராணம்.

பிருகற்பதி (ப்ருஹஸ்பதி)=வியாழன். இரித்தை-நாழிகை. இடையுவா-பௌர்ணிமை. "இடையுவாவினிற்சுவேலம்வந்திறுத்து" என்பது இராமாயணம். கிரீட்டுமம் (க்ரீஷ்ம)=முதுவேனில்.

மூன்றுவதாகிய ஐயர் வகையிலே கூடசதுர்த்தம், பாடண்டத்துறை, ஓர்க்கோலை, அதிராத்திரம், பிருகற்பதி என்பன முறையே கூடசதுக்கம், பாடாண்டத்துறை, ஒக்கோலை, அத்திராத்திரம், பிரகற்பதி என்று கொள்ளப்பட்டுவேறுயின. கூடசதுர்த்தம்—சித்திரகவிகளுள் ஒன்று. கூடம்-மறைவு. சதுர்த்தம்-நான்காவது. பாடண்டத்துறை-புறச்சமயநெறி. ஓர்க்கோலை-அம்பர். அதிராத்திரம்-யாகங்களுளொன்று.

நான்காவதாகிய அவனிவகையிலே உகம், கோவிந்தர், ஆபகை, உருவரை, மீன்கோட்பறை, குரும்பி, பிராகாரம், ஆபீரவல்லி, தெற்றியம்பலம் என்பன முறையே யுகம், விந்தர், ஆபதகை, உருவரை, மீன், கோட்பறை, குறும்பி, பிரகாரம், ஆபீரம், வல்லி, தெற்றி, அம்பலம் எனக்கொள்ளப்பட்டுப்பிறழ்ந்தன. உகம்=பூமி. "ஈட்டுகமயிற்றடங் குழற்கண்" என்பது இரகுவமிசம். கோவிந்தர்=இடையர். ஆபகை (ஆபகா)=யாறு. ஆபகை-நீராற்செல்வது. "ஆபகையெனப் பெருகி" என்பது இரகுவமிசம். உருவரை (உர்வரா)=எல்லாத்தாநியங்களும் விளையும் நிலம். மீன்கோட்பறை-நெய்தற்பறை. குரும்பி-புற்றுஞ் சோறு. 'குரும்பிதேரிய முதையலூர்" என்பது தணிகைப்புராணம். பிராகாரம்-மதில். ஆபீரவல்லி (ஆபீரவல்லீ) இடைச்சேரி. தெற்றியம்பலம்-சித்திரகூடம். "தெற்றியம்பலந்தானென்றே சித்திரகூட மென்ப" என்பது சூடாமணி நிகண்டு.

ஐந்தாவதாகிய ஆடவர் வகையிலே ஏரின்வாணர், பொல்லர், உல்லாகன், அண்ணன், பிரவுடை, வயா, அநு என்பன ஏரினர், வாணர், பொல்லார், உல்லாபன், அண்ணல், பிரவிடை, வயாவு, அணு எனக்கொள்ளப்பட்டுப் பிழைப்பட்டன. ஏரின்வாணர்—வேளாளர். பொல்லர்—தையற்காரர். உல்லாகன்—நோயுற்றுநீங்கினவன். அண்ணன்-முத்தோன். பிரவுடை (ப்ரௌடா)=ஐம்பத்தைந்து வயசு

டையவள். "தரித்த வாலே தருணேபிரவுடை" என்பது கந்தபுரா ணம். வயா—கர்ப்பவேதனே. அறு—கதுப்பு.

ஆறுவதாகிய அநுபோகவகைபிலே ஐயங்கவீநப், கிங்கிணி, பிங்குசம், சிகழிகை, கைரிகம், சரக்கு, தருவி, அநுத்துருதபஞ்ச மம் என்னுஞ்சொற்கள் முறையே ஐயம், கவினம், கிண்கிணி, பங்கு சம், சிவளிகை, காரிகம், சாக்கு, தலுவி அநுத்திரபஞ்சமம் என்று கொள்ளப்பட்டுப் பிழைப்பட்டன. ஐயங்கவீநம் (ஹையங்கவீநம்) வெண்ணெய். கிங்கிணி-சதங்கை. பிங்குசம்-தலைக்கோலம். "காந் தட் பிங்குசம் வழுவ" என்பது இரகுவமிசம். சிகழிகை-பெருஞ் சூட்டு. கைரிகம் (கைரிக)=காவிக்கல். சரக்கு-பொன். தருவி- சட்டுவம். அநுத்துருதபஞ்சமம்-ஒருபண்.

ஏழாவதாகிய பண்புசெயல்களின் பகுதிவகைபிலே உவவு, தா, வபநம், மேம்பாடு, துயல்வரல், சீமம், விறப்பு என்னுஞ் சொற்கள் முறையே உவ்வு, தாவு, அபநம், மெய்ப்பாடு, துயில்வரல், சிம், பிறப்பு என்னுஞ் சொற்களாய் வேறுபட்டன. உவவு-தவம். தா—பகை. வபநம்-சர்த்தி. மெய்ப்பாடு-புகழ். துயல்வரல்-அசைதல். "தோளு நாலுந் துயல்வரும்" என்பது கந்தபுராணம். சீமம் (ஸீமா)= எல்லே. விறப்பு-செறிவு. 'வெறுத்தபயிர் விறப்பினீங்க" என் பது தணிகைப்புராணம்.

எட்டாவதாகிய மாப்பெயர்வகைபிலே பிரதிமானம், குடஞ் சுட்டு, ஓது என்னுஞ் சொற்கள் முறையே பிருதுமானம், குடம், சுட்டு, ஓதி என்பனவாக வேறுபட்டன. பிரதிமானம்-யானைக் கொம்பினடு. குடஞ்சுட்டு-பசு. ஓது-பூனை.

ஒன்பதாவதாகிய மரப்பெயர் வகைபிலே ஆரக்குவதம், நிர்க் குண்டி, திருணபதி, நீவாரம், திருணம் என்னுஞ் சொற்கள் முறை யே ஆர்க்குவதம், நீர்க்குண்டி, திரணபதி, நீர்வாரம், திரணம் என்று கொள்ளப்பட்டு வேறுபட்டன. ஆரக்குவதம்- கொன்றை. நிர்க் குண்டி-வெண்ணொச்சி. திருணபதி—பனே. நீவாரம்-குளநெல்லு. திருணம்-புல்லு.

ஒன்றென முடித்தல் என்னும் உத்தியினுல் இப்போது அச்சிடப்பட்டிருக்கும் உரிச்சொனிகண்டிலுஞ் சில திருத்தம் கூறுதும்.

உரிச்சொனிகண்டிலே தேவப்பெயர்த் தொகுதியிலே "இல்லோரை" என்பது "எல்லோரை" எனவும், மக்கட்பெயர்த் தொகுதியிலே "விருந்தம்" என்பது "விருந்தாம்" எனவும், விலங்கின் பெயர்த் தொகுதியிலே "குரோடம்" என்பது "குரோட்டம்" எனவும், "காகோலம்" என்பது "காலோலம்" எனவும், மரப்பெயர்த் தொகுதியிலே "துரு" என்பதும், "சாலம்" என்பதும் "துருசாலம்" எனவும், பண்புபற்றிய பெயர்த்தொகுதியிலே "அவிரதம்" என்பது "அவிர் தம்" எனவும், "ஆற்றல்கெடல்" என்பது "ஆற்றல்" எனவும், "கெடல்" எனவும், பலபெயர்க் கூட்டத் தொருபெயர்த் தொகுதியிலே "அரசனுபாத்தியாயப்பன் மூத்தோன்" என்பது "அரசனுபாத்தியாயனப்பன் மூத்தோன்" எனவும் பிழைப்படுமாறு பிரகடனஞ் செய்தனர்.

இல்-இராசி. விருந்தம்-சுற்றம். குரோடம்-பன்றி. காகோலம்-அண்டங்காக்கை. துரு-மரம். அவிரதம்-என்றும். ஆற்றல் கெடல்-தோல்வி. "அரசனுபாத்தியாயன்" எனப்பாடங் கொள்ளின்; "அரச னுபாத்யாய னுய்தந்தை தம்மு னிகரில் குரவரி வரைவர்" என்னும் ஆசாரக்கோவையோடு மாறுபட்டுக் குரவரும் நால்வராய்ப் பிழைப்படும்.

யாழ்ப்பாணத்துச்சுன்னுகம் குரோதிஸு—ஆனிமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ

நட்பு.

சிங்கம் புலி முதலிய சில வனவிலங்குகளே தனித்துறைவன. பலர் ஒருமிக்க வாழ்வதே மானுடவியற்கை. ஆன்மவிசாரஞ் செய்யும் யோகியர்க்கே ஏகாந்தம் இனியதாகும். ஏனை விசாரஞ் செய்வாரும் ஒருசார் ஏகாந்தத்தை நாடுவர். மனிதரோடு மனிதர் கூடி வாழ்வதே மானுடவியற்கை யாயினும், அன்பிலாவிடத்து அவ்வாழ்க்கையாற் பயனில்லை. நல்லாரோடு நட்புக்கொள்ளும் இயல்பிலான் தனித்தியங்கும் வனவிலங்கனையான். பலர் தம்மிடை அன்புடையராதல் கூடும். பலரும் தம்மிடை நட்புக்கோடல் இயலாது. ஒருவனைப் பலர் அறிந்திருத்தல் கூடும். அவரெல்லாம் அவனுக்கு அறிமுகமானவர்களே யன்றி நண்பரல்லர். தாம் அவர் என்னும் வேற்றுமையில்லாத இருவரிடத்தே இயைவதாகும் நட்பென்பது. (ஆருமற்றதே தாரம்:) ஊரிலொருவனே தோழன்.

ஒருவரோடொருவர் நட்பாதற்குக் காரணமாவன;—அவர் ஒரு தேயத்தாராதலும், பலகாற் கண்டுஞ் சொல்லாடியு மருவுதலும், ஒத்தவுணர்ச்சிய ராதலுமாம். இவற்றுள் உணர்ச்சியொத்தலே சிறப்புடைத்து. தாம் அவர் என்னும் வேற்றுமையின்றி உணர்ச்சியொத்த இருவர் நட்பே உள்ளும் புறமும் ஒத்ததாம்.

முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

இவர் ஒருவரையொருவர்

இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

நன்னட்பால் உளதாகும் இன்பமும் தீநட்பால் உளதாகும் துன்பமும்,

நுண்ணுணர்வி னாரொடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்

உணர்வில னாகிய வூதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்து ளொன்று.

என்றவாறும். நன்னட்பால் உளதாகும் இன்பம்,

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

என்றபடி, ஒருகாலைக் கொருகால் மிகுவதாகும். சர்ச்சனருறவு சர்க்கரைப்பாகு.

கனைகடற் றண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே—நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமி லாளர் தொடர்பு.

தீநட்பால் உளதாகும் இன்பம் ஒருகாலைக் கொருகாற் குறைவதாகும். நன்னட்பு நாட்குநாள் வளரும்: தீநட்பு நாட்குநாள் தேய்தலாகும்.

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

இங்ஙனமிருத்தலின் இணக்கமறிந்திணங்குதல் வேண்டும். ஆயினும் நன்னட்புக்குரியாரை அறிவது திரிபுடைத்து.

இற்பிறப் பெண்ணி யிடைதிரியா ரென்பதோர்
நற்புடைக் கொண்டமை யல்லது—பொற்கேழ்
புனலொழுகப் புள்ளிரியும் பூங்குன்ற நாட
மனமறியப் பட்டதொன் றன்று.

ஆகவே,

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
இனனு மறிந்தியாக்க நட்பு.

ஏனெனின்,

நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.

அங்ஙனஞ் செய்வதில்,

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

நட்பியல்பில்லாரை எவ்வாற்றானும் ஒழிக்க வேண்டும். துஷ்ட ரைக் கண்டால் தூரவிலங்கு.

> மருவுக மாசற்றார் கேண்மை ஒன்றீத்தும்
> ஒருவுக ஒப்பிலார் நட்பு.

உலகினரும் "விண்டற்கு விண்டன் மருந்து" என்பர்.

அடுத்ததன் தன்மை ஆத்துமாவாகும். பெருங்காய மிருந்த குடுக்கை வாசனை போகாது. தீயினத்தால் வருங்குற்றம் ஸஹவாஸ தோஷம் எனப்படும். நண்பனுக்கு நண்பன் பரிசனவேதி.

> நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
> கினத்தியல்ப தாகு மறிவு.

ஒவ்வொருவருடைய குணதோஷத்தையும் அவ்வவருடைய ஸஹ வாஸத்தால் அறிதலாகும். ஒருவனை அறிவதற்கு அவன் நண் பனே உரையாணி.

> மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
> இன்னா னெனப்படுஞ் சொல்.

அவரவர் தேடிக்கொள்ளும் நட்பும் அவரவர் இயற்கைக் கேற்ற தாகவே யிருக்கும். சிற்றெறும்பைச் சிற்றெறும்பும் கட்டெறும் பைக் கட்டெறும்புந் தேடும். சனத்தோடு சனஞ் சேரும்; சந்த னத்தோடு கர்ப்பூரஞ் சேரும்.

> நற்றா மரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போற்
> கற்றாரைக் கற்றாரே காமுறுவர்—கற்பிலா
> மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்
> காக்கை யுகக்கும் பிணம்.

தாட்டோட்டக்காரனைக் கூடுவதிலும் தனியே இருப்பது நலம். நல்லோர் தீயோரை நாடார்: அவரை அணுகவும் அஞ்சுவர்.

> நல்லோர் வரவால் நகைமுகங்கொண் டின்புறீஇ
> அல்லோர் வரவா னழுங்குவார்—வல்லோர்

இனந்தீதெனினும் நல்லறிவாளர் தம்மளவில் மனந்திரியார்.

கடல்சார்ந்து மின்னீர் பிறக்கு மலேசார்ந்தும்
உப்பீண் டுவரி பிறத்தலால்—தத்தம்
இனத்தனைய ரல்லர் எறிகடற்றண் சேர்ப்ப
மனத்தனையர் மக்களென் பார்.

இவரோடு மருவிய தீயினத்தர் பூவோடு சேர்ந்த நார்போல் மணம் பெறுவர். அறிவுடையாரை அடுத்தாற் போதும்.

இளைஞரினத்தை இளைஞர் நாடுவது இயற்கை. நல்லொழுக்க மில்லாத இளைஞரிடத்திற் பாவம் குடிகொள்ளும்; நன்மை யாதொன்றும் இருப்பதில்லை. அவர்களோடு கூடின இளைஞர் அக்கூட்டுறவின் பலனைப் பெறுதொழியார். ஒட்டு வியாதிக்கும் உய்தலாம்; தீநட்புக் கொண்டவர்க் குய்வில்லை. அல்பஸஹவாஸம் பிராண சங்கடம். நல்லிணக்கமல்ல தல்லற்படுத்தும். பன்றியோடுகூடிய கன்று மலந்தின்னும். தனிகரான இளைஞரோடு வறியரான இளைஞர் நட்புக்கொள்ளின் இச்சகம்பேசும் இழிந்த வழக்கம் மேலிடுவதாகும். இளமையிற் பழக்கம் சுடுகாடுமட்டில்: அப்பால் அதனைக் கடியலாகாது. ஆகையால் பிள்ளைகளை இணக்கமறிந் திணக்குதலே பெற்றோர் மேற்கொள்ளத்தக்க முதன்மையான பாலசிக்ஷை. இளைஞர் இணக்கமறிந் திணங்காவிடத்து, உவாத்தியான், பஞ்சதந்திரத்தில் தான் மித்திரபேதம் வல்லனாய், பிள்ளைகளை இரண்டாவது தந்திரத்தில் நன்கு பயிற்றல்வேண்டும். இது செய்யகில்லாதவன் உவாத்திமைத் தொழிற்கு அருகனாகான்.

ஒருவர் நமது நட்பை நாடியவிடத்து, நாம் யாதேனுமொரு தீக்கருமத்தில் அடியிடுவதாகப் போக்குக்காட்டுதல் வேண்டும். அங்ஙனஞ் செய்கையில், எவ்வாற்றானாயினும் அவர் அதினின்றும் நம்மை விலக்க முயல்கின்றனரா இலரா என்பதை யூகித்தறிக. இதனால் அவர் யாதொரு சுயநன்மையை நாடியே நமது நட்பை விரும்பினவரா அல்லரா என்பது புலப்படும். பிறகு வெளியிட்ட விடத்தும் தீங்கு விளைதலில்லாத சில அந்தரங்க காரியங்களை அவரிடம் உணர்த்தி, அவற்றை அவர் வெளியிடுவதையும் இடாமையையும் அயலவரால் அறிந்துகொள்க. இன்னோரன்ன ஆராய்ச்சிகளே நட்பியல்புடையாரை அறிந்துகொள்வதற்கான உபாயங்களாம். இஃ

தன்றியும், ஆபத்திலேயறியலாம் அருமை சினேகிதனை. தனக்கென்று வைத்து யாதொருபயனையும் விரும்பாமல் நட்புக்கொள்பவன் உத்தமன்.

ஒன்றும்பெறுதலிலரெனினும் உற்றபெருஞ்செல்வத்தினர்பாற்
சென்றுகொளுநட்புடையரெனத் தேயஞ்சொலற்கேசிலர்சூழ்வார்.

இங்ஙனம் நட்பவன் மத்திமன். யாதொருபயனை விரும்பி அதன்பொருட்டே நட்பவன் அதமனாவான்.

கடையாயார் நட்பிற் கமுகனையர் ஏனை
இடையாயார் தெங்கி னனையர்-தலையாயார்
எண்ணரும் பெண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே
தொன்மை யுடையார் தொடர்பு.

இதனாலும் நட்பினர் திறத்தையினிதறிக.

உண்மை நண்பர்கள் கருமமாயின செய்யுங்கால் நட்புரிமையாலே கேளாது செய்தலும் கெடும்வகைசெய்தலும், தமக்கு வேண்டியன தாமே கோடலும் உண்டு. இங்ஙனம்

அழிவந்த செய்யினு மன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

அன்றியும்

இறப்பவே தீய செயினுந்தன் னட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ—நிறக்கோங்
குருவவண் டார்க்கும் உயர்வரை நாட
ஒருவர் பொறையிருவர் நட்பு.

பொறுமையின்றிப் பகைகொள்வதும் மீண்டுங் கூடுவதுமாகின்ற நட்பு நட்பினருடைய பெருமைக்குக் குறைவாகும்.

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலு
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்.

அந்நட்பிற்குத் திட்பமில்லை.

வேற்றுமை யின்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்
ஆற்றுந் துணையும் பொறுக்க பொறானாயின்
தூற்றாதே தூர விடல்.

வேற்றுமையின்றி நண்பரது இன்பதுன்பங்களைத் தமவாகக் கொள்ளும் உணர்ச்சிபொத்த உண்மை நண்பினர்க்குத் தமது நட்பால் விளையும் நன்மைகள் பலவுள.

சீரியார் கேண்மை சிறந்த சிறப்பிற்றாய்
மாரிபோன் மாண்ட பயத்ததாம்.

அவற்றுட் சில வருமாறு;—

1. கல்லடைப்பு நீரடைப்பு முதலியன போலவே, இன்பதுன்பங்கள் மனத்தில் அடைபட்டுக் கிடப்பதும் ஒரு பிணியாம். மனக்கவலை பலக்குறைவு. கல்லடைப்பு நீரடைப்பு முதலிய பிணிகட்கு ஆயுள்வேதியர் பரிகாரங்கூறுவர். மனநோய்க்கு மருந்தில்லை. மனத்தில் அடைபட்டிருக்கும் இன்பதுன்பங்களை வெளிப்படுப்பதே மனநோய்க்குப் பரமௌஷதம். ஆயினும் அடைபட்டிருக்கும் இன்பதுன்பங்களை மனத்தினின்றும் வெளிப்படுதற்கு ஒரு போக்குவீடு வேண்டும். அங்ஙனம் போக்குவீடாகின்றவன் நண்பனே. உண்மை நண்பனிடத்தில் உள்ளத்திலுள்ளதை உரைத்துக்கொள்வதனால் மறுதலையான நன்மைகள் இரண்டு உளவாம். துன்பம் பப்பாதியாம். உவகை ஒன்றிரண்டாம். உண்மை நண்பனே தாயப்பொருட்கு வழக்கிடாமல் தானாகவே துன்பத்தைச் சமமாகப்பங்கிட்டுக் கொள்ளும் பங்காளி: உள்ளக்கவலையை ஏற்றுக்கொள்ளும் சுமைதாங்கி. உலகில் ஒன்றிரண்டாம் வாணிகமில்லை. உண்மை நண்பனே ஒரு வகையை இரண்டாக்கவல்ல வணிகன்: அஷ்டசித்தியிலும் அடங்காத இவ்வற்புதத்தைச் செய்யவல்ல சித்தன். இதுபற்றியேயன்றோ வேந்தர் முதலியோர்சிலர் சிலரை மிகமேம்பட்ட பதவியில் வைத்துத் தம்மோ டொப்பக்கொள்வது. துரியோதனன் சூதன் மகனை நட்புக்கொண்டு அங்கதேசத்துக்கு அதிபதியாக்கினன்.

இன்னா னெனவறியா என்னை முடிகவித்து
மன்னர் வணங்க அரசியற்றிப்—பின்னையும்
தன்னெச்சி லுண்ணத் தகைமையான் தானுண்டான்
என்னெச்சி லென்னோ டினிது.

மைத்தடங்கண் மாதேவி வார்துகிலை யான்பிடிக்க
அற்று விழுந்த வருமணியை—மற்றவற்றைக்

கோக்கேனே வென்றுரைத்த கொற்றவற்கென் ஞருயிரைப்
போக்கேனே வெஞ்சமத்துப் புக்கு.

என்றதனால் துரியோதனனது நட்பிருந்தபடி நன்கு புலப்படும். நந்தி யென்னுந் தொண்டைமான் ஒரு கம்மியனை அமைச்சனாக அமைத்துக் கொண்டான். பிசிராந்தை என்னும் புலவர் கோப்பெருஞ் சோழனுக்கு உயிர் போன்ற நட்பினராதல் தமிழில் பிரசித்தம். இன்னோரன்ன வரலாறுகள் உரோம சரிதத்திற் பலவுள. மனைவிமக்கள் முதலிய தொடர்புடையார் உளராகவும், அன்னோர் இங்ஙனஞ் செய்தற்காரணம் நட்பாலுளதாகும் நன்மை சுற்றத் தொடர்புகளால் உளதாவதில்லை யென்பதே. நல்லினத்தில் நட்பு வலிது. உற்ற சினேகன் உயிர்க்கு அமிர்தம்.

2. முன்னும் பின்னுமாகச் சிந்தித்தும் தெளிவடையாமல் மலங்கிக்கலங்கியிருக்கும் பல எண்ணங்கள் மனதில் நிறைந்த ஒருவன் அவற்றைப் பிறரிடம் வெளியிட்டால் மாத்திரமே, அறிவுதெளிவடைந்து நுட்பம்பெறும். அங்ஙனம் வெளியிடுங்கால் ஒவ்வோரெண்ணமும் ஒழுங்காகப் புறப்படும். எண்ணங்களை வார்த்தையிலமைத்து உரைக்கும்போது அவற்றின் நோக்கம் நன்கு புலப்படும். வெளியிடாமல் ஒருநாள்முழுவதும் ஓயாமற் சிந்தித்தவிடத்தும் அவை ஒழுங்காக உருப்படுவதில்லை. அரைநாழிகை நேரமாயினும் அவற்றை ஒருவனிடத்தில் உரைக்கப்புகுந்தால், அறிவு தெளிவாக விளக்கமாகின்றது. கல்லானது தன்னளவிற் கருக்குடையதன்றேயாயினும் அதனிடம் தீட்டிய கத்தி கருக்கடையுமாறுபோல, ஒருவன் தன்னளவில் மந்தனேயாயினும் அவனிடம் உரைத்துக்கொண்ட எண்ணங்கள் ஒழுங்காக உருவடையும்.

(இன்னும் வரும்.)

இங்ஙனம்.

தி. செல்வக்கேசவராய முதலியார்.

உ

திருச்சிற்றம்பலம்.

சந்தான குரவர் சரித்திரம்.

நஞ்செந்த மிழுலகமுய்யத் திருவவதாரஞ் செய்தருளிய சைவ சமய குரவருள் ஆளுடையவரசுகள் ஆளுடைய நம்பிகள் திருவவதாரஞ் செய்தருளிய நடுநாட்டின்கண் திருப்பெண்ணாகடத்திலே அச்சுதகளப்பாளரென்பா ரொருவரிருந்தனர். அவர் எல்லாப்பேற்றினை யுடையராயினும் புத்திரப்பே றில்லாராகிப் பெரிதுங் கவலெய்தித் தங்குலகுருவாகிய சகலாகமபண்டிதரைச் சென்றணைந்து ஐய! யான்பெறுப் பேறொன்றுமிலது, பொய்யாமொழியாராகிய தெய்வப் புலமைத் திருவள்ளுவனார் "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த—மக்கட்பே றல்ல பிற" என்றபடி யானிதுகாறு மெல்லாச் செல்வந்துய்த்து முதுமையெய்தியும் மக்கட்பேறொன்றில்லேனாயினேன். அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றுவார் இறுக்கற்பாலவாயகடன் மூன்றனுள் தென்புலத்தார் கடன் சிறந்ததன்றே! என் செய்வல்! எனக்கரைந் தவரடிக்கீழ் நெடும்பனைபோல் வீழ்ந்து பணிந்தனர். அவர் பெரிதுமாகுலித்து யாஞ்செயத் தக்கதென்கொலென் றொருவாறு தேர்ந்து பன்னிரு திருமுறையுள் திருநெறித்தமிழ்வேதமாகிய ஆளுடையபிள்ளையார் திருவாய்மலர்ந்தருளிய தேவாரமெனப்படு மருட்பாத்திருமுறையிற் கயிறுசாத்தக் "கண்காட்டு நுதலானும்" என்னு முதற்குறிப்பினையுடைய திருப்பதிகத்திலே "பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை—வாயினவே வரம்பெறு வரையுறவேண் டாவொன்றும்—வேயினதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்—தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே" என்னுந் திருப்பனுவலுதயமாக ஆசிரியராகிய சகலாகம பண்டிதர் தம்மாணுக்கராகிய அச்சுதகளப்பாளர்க் கதன்செம்பொருளை நனிபெரிதும் விளக்கினர்.

அவ்வச்சுதகளப்பாளரோ அத்திரவிடவேதச் செம்பொருளைக் கேட்டாங்குக் கழிபேருவகைகொளீஇக் கற்பினருந்ததி யன்ன தங் காதலியொடு நாற்கோட்டும்பனம்பனை வழிபடுஞ் வேதவன,

மெனும் வடமொழிப் பெயரிய திருவெண்காடெய்தி முச்சுடர்த் தீர்த்தமெனப்படுந் திருமுக்குளத்துறையி னீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்து நிகமாகமங்களனைத்தும் பரப்பிரமப் பொருளெனத் துணிந்தகுணாதீதப் பொருளையும் அவனைப்பிரியாத கருணைநாயகியாகிய மடமயிலையும் வழிபாடு செய்துவந்தனர். இவரிவ்வாறியற்றிவருஞான்று மரகதவல்லி பங்கராகிய சிவபெருமான் ஒருநாள் அவர் சொப்பனத்தின்கண்ணே தோன்றி "மைந்த! நீ கவலொழி, நினக்கு இத்தமிழுலக முய்யும்வண்ணம் ஆளுடையபிள்ளையாரென்றியாவருங் கருதவும், திராவிடவேதச் செம்பொருளைத் தன்னகத்தடக்கிய சைவ சித்தாந்த சாத்திரத்தை வெளிப்படுத்தவும், சித்தாந்த சைவத்தாபனஞ்செய்யவும் மொரு மகவைத்தருகின்றேம்; அவன் ஆசிரியத்தலைமை யெய்திச் சிறப்பன்" என்றேகூறித் தம்முருக்கரந்தனர். பின்னர்ச் சிலநாளில் அங்குநின்றும் போந்து மீளவே அவர்காதலியார் மணிவயிற்றிற் சலஞ்சல மொளிகெழு முத்தைப் பயப்பதுபோற் கருக்கொண்டீன்று இது வெண்காட்டடிகளருளேயாமெனத்துணிந்தப்பெறலரும்பேறாகிய மகவுக்குச் சுவேதவனப் பெருமாளென நாமகரணஞ்செய்து திருப்பெண்ணாகடத்தில் வசிப்பாராயினர்.

இவ்வாறு வளர்ந்துவருநாளில் சுவேதவனப்பெருமாளவதாரங் கேள்விப்பட்டு இவ்வச்சுதகளப்பாளர் காதலியாரோடுடன்பிறந்தார் திருப்பெண்ணாகமடைந்து அம்மகவைத் தம்மனையகத்து முன்னைஞான்று பிரமவிருடியாகிய வசிஷ்டமுனிவர் வியாக்கிரபாதமுனிவர் புத்திரராகிய உபமன்னுயுபகவானைக் கொணர்ந்து வளர்த்ததுபோன்று கொணர்ந்து தொட்டிலிலிட்டுத் தம்பதியாகிய திருவெண்ணெய் நல்லூரிலேயே வளர்த்துவந்தனர். இவர்க்கு மூன்றகவை நிரம்பு முன்னரே தாம் சாமுசித்தராதலின் மெய்யுணர்வு தலைக்கூடத் திருக்கயிலாய பரம்பரையில் நந்திபெருமான்பாற் சித்தாந்த சைவநெறியருளுபதேசம் பெற்ற சனற்குமார பகவான் மாணாக்கராகிய பரஞ்சோதிமுனிவர் தென்மலையத் தருந்தவத்துக் குறுமாமுனியைக் காணுமாகருதிக் கயிலைவரையை நீங்கி விண்வழிப்படர்ந்து காசிமுதலிய பலதலங்களையுந் தரிசித்துத் தென்னாடணுகிக்காளத்தி, காஞ்சி, கழுக்குன்று, அருணாசலம் இவற்றைக் கண்டுபோந்து திருவெண்

ணைய் நல்லூரை யணுகி நம்மடிகளிருந்த மனையகத்தின்வழியேபோத இவர்க்குக் கமனகுளிகையிற் செல்லுகை தவிர்ப்பக்கண்டு ஈண்டோ ரதிசயமிருப்பதென்னேயோவென் றிறங்கிப்பார்த்துழி மணலிற் சிவலிங்கமியற்றி விளையாடல்புரிந் திறைவனை நாடியிருந்த அருமந்த மகவைக்கண்டு அம்மகவுக்குத் தக்கணாமூர்த்தியாகிய பெருமான் றிருக்கரத்திற் பன்னிருசூத்திரவடிவினதாகிச் செறிந்த வடமொழிச் சிவஞானபோதத்தை அற்றைஞான்று போதவூர்நாடிய புண்ணியப் பெருந்தகையாம் வாதவூரடிகட்கு வடவானிழலொரீஇப் பெருந் துறையிற் குருந்துறை நீழலிற் குருமணியருளுபதேசஞ்செய்தாங்கு அம்மெய்புணர்ச்சியுடையார்க்குப் பொய்கண்டகன்ற மெய்கண்ட தேசிகனெனத் திருநாமஞ்சாத்தி அருளுபதேசஞ்செய்து கடைக்க ணித்தருளி நம்மை யடைவார்க்குப் பரிபாகம் வந்தவாறே யருளுபு தேசஞ்செய்க வென்றுரைத்துப்போயினர்.

இது நிற்க;—இம்மெய்கண்ட தேசிகர் அச்சித்தாந்தவருளுப தேசம் பெற்றவுடனே அச்சிவஞான போதத் துட்கிடைப்பொரு ளாகிய பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தப் பொருளைக்கேட்ட வாறு சிந்தித்துத்தெளிந்து தமக்காசங்கை யெழுந்த விடத்துப் பொ ல்லாப்பிள்ளையாரருளிச்செய்த சூர்ணிக்கொத்தாற்றடை தீர்ந்துசெந் தமிழுலகுய்ய அதனைவார்த்திகப் பொழிப்புடன் தமிழின் மொழி பெயர்த்துத் தம்மை யடைந்த அதிபக்குவர்க்கெல்லா முபதேசித்து க்கொண்டுவந்தனர். இவ்வாறு நிகழ்கையில் அங்குத் தம்மாணைக் கர்பாலடைந்த தங்குல குருவாகிய சகலாகமபண்டிதரோ தம்மை யடைந்த அதிபக்குவர்க்கெல்லாம் மெய்கண்டதேசிகர் சித்தாந்த சைவநிலையை யருளுபதேசஞ் செய்து வருவது கேட்டறிந்து அவர் தாந்தம்முழைவாராமை கண்டு தாமே சென்று காணச்செருக்குடன் செல்வராயினர். தேசிகேசராகிய மெய்கண்டதேசிகர் பதி பசு பாச மென்னுந்திரிபதார்த்தத்துள் பாசபதார்த்தமாகிய ஆணவமுதலிய பஞ்சபாசவிலக்கணங்கூறி அவ்வாணவவிலக்கணத்திற்குக்காட்டாகத் தம்பால்வருஞ் சகலாகம பண்டிதனைச் சுட்டிக்காட்டினர். அதை யுணர்ந்த சகலாகமபண்டிதர் ஒன்று முனையாடாது தேசிகேசர் திருநோக்கத்தானே அதிதீவிரபக்குவ மெய்தி அழலது மெழுகது

போலக் குழைந்துருகி அடியற்ற பனைபோல் வீழ்ந்து யாமுய்ய
வெழுந்தருளிய தம்பிரானே யெனவாழ்த்தி நின்றனர். தேசிகேச
ரும் அவரையும் விரைந்தாட்கொண்டருளித் திருநோக்க முதலிய
வறுவகைத் தீக்கைகளையுஞ் செய்து தாமருளிச்செய்த சிவஞான
போத மொழிபெயர்ப்பினை யுபதேசித் தனுக்கிரகஞ் செய்தனர்.
இவரோ சிவஞானமொழிபெயர்ப்பின் பொருள் செவ்விதின் விளங்
கப்பரபக்கந்தடை விடைகளாற் பரிகரித்துச் சுபக்கமாகிய சித்தா
ந்தமெனப்படுஞ் சிவஞானபோதத்துக்கு வழிநூலாகப் "பார்விரித்த
நூலெல்லாம் பார்த்தறியச் சித்தியிலே—யோர்விருத்தப் பாதிபோ
தும்" என்றும், "பார்விருத்தத் தாலிப்பார் விருத்தமாக—வுண்மை
சாதிப்பார்" என்றும் "சிவனுக்கு மேற்றெய்வமில்லை—சித்திக்கு மேற்
சாத்திரமில்லை" என்றும் அபியுக்தர்களெல்லாங் கூறிச் சித்தியாரை
த்திருவாய் மலர்ந்தருளித் தேசிகேசர் சந்நிதிக்கணறிவிக்க அதனை
க்கடைக்கணித்தருளி அவருக்கு அருணந்தி யென்னுந் தீக்ஷா நாமம்
புனையவே அவர்மேல் தோத்திரமாகச் சிந்தாந்தசைவப் பொருளட
ங்கிய இருபாவிருபஃ தென்னுமொரு நூலையு மருளிச்செய்தனர்.
இவர்அத்தேசிகேசரிடத்து நிழலேபோல விளங்கிச்சித்தாந்த சைவ
சமய குரவராக விருப்பதனைக்கேட்டருளிய திருவதிகைப் பதியில்
வாழ்க்கையுடையராய மனவாசகங்கடந்தாரென்பார் தாமும் விரைந்
தடைந்து மெய்கண்டதேசிகேசர்பா லருளுபதேசம்பெற்றுச் சிவா
கமத்துள்ளூறு பொருளாகிய தசகாரியத்தைத் தமிழுலகமுய்ய உண்
மைவிளக்கமெனும் பெயர்நிறீஇ யருளிச்செய்தனர். இவ்வாறு மெய்
கண்டதேசிகர் தம்மையடைந்த அதிபக்குவராயநாற்பத்தொன்பதின்
மர்க்குஞ் சித்தாந்த சைவநிலையை யருளுபதேசஞ்செய்து பொற்பொ
துவி லற்புதத் திருநடனஞ்செய்யு மிறைவனடி நிழலிற் புக்கொடுங்
கினர். இது கிடக்க. (தொடரும்).

தி. சண்முகம்பிள்ளை.

ஸ்ரீ:

நன்னூற் குறிப்பு.

——:o:——

இது நன்னூற் சூத்திரங்களில் இடையிடையே சிலவற்றிற்கு இதுவரை வெளிவந்த உரைகளில் நன்கு புலப்படாத விஷயங்களை என்னால் இயன்றவளவு ஆங்காங்கு விளக்கி எழுதப்பெறுவது. இதனுள் முன்னுரைகளுடன் ஏதேனும் மாறுபாடு கண்டால் அதுகொண்டு யான் அவ்வுரையை மறுத்துக் குறைகூறியதாகப் பேரறிவாளர் ஒருசிறிதுங்கருதாது யானெழுதுமவைகள் பொருந்துவனவா, என்பதனைமட்டும் உற்றுநோக்குமாறு வேண்டுகின்றேன்.

பொதுப்பாயிரம் சூத்திரம்—கூ

முன்னோர் மொழிபொருளே யன்றி யவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும்—முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோளில் லென்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்.

(இதன்பொருள்) முன்னோர் மொழிபொருளே யன்றி-முதனூலாசிரியர் மொழிந்த பொருளே யல்லாமல், அவர் மொழியும் - அவர் வழங்கிய சொற்களையும், பொன்னேபோற் போற்றுவ மென்பதற்கும் - பொன்னைப் போல விரும்பிப் பேணுவோம் என்பதற்கும், முன்னோரின் வேறுநூல் செய்தும் எனும் மேற்கோள் இல் என்பதற்கும் - முதனூலாசிரியர்போலப் பிறிதொரு நூலும் ஆதாரவாக வேண்டாது தனியேயொருநூல் செய்வோமென்னும் ஊக்கம் எமக்கில்லை யென்பதற்கும், கூறு பழஞ் சூத்திரத்தின் கோள் - முதனூலாசிரியராற் கூறப்பட்டுள்ள பழஞ்சூத்திரத்தினை இடை இடையே கொள்ளுதலாம் **(என்றவாறு)**

(குறிப்பு) முன்னோர்-முதனூலாசிரியர் என்பது "முன்னோர் நூலின் முடிபொருங் கொத்து" என்றதனாலறிக. அது சாதிப்பன்மையாய் இங்கு முதனூலாசிரியனை யுணர்த்திற்று. முன்னோரின் என்பதில் ஐந்தனுருபு ஒப்புப்பொருளில் வந்தது. அது செய்தும் என்னும் வினைகொண்டு முடிந்தது. வேறு என்பது இங்குத் தனிமைப்

பொருளுணர்த்திற்று ; "உருபு பலவடுக்கினும் வினைவேறடுக்கினும்" என்புழிப்போல. போற்றுவம், செய்தும் என்பன உயர்த்தற்கட்பன்மை; அவையும் நூல்செய்வார் கூறும் கூற்றின்அநுவாதமாக வந்தன. மேற்கோள் இங்கு ஊக்கப்பொருளில் வந்தது. அஃது அப்பொருட்டாதல் புறநானூறு (௪௯) "இடஞ்சிறிதென்னு மூக்கந்துரப்ப" என்பதனுரையால் விளங்கும். இனி இவ்வாறன்றி மேற்கோள் என்பதற்குப் பிரதிக்கினையெனப் பொருளுரைத்து, முதனூலாசிரியர்போலப் பிறிதொரு நூலையும் ஆதரவாகக்கொள்ளாது தனியே யொருநூல் செய்வோமென்னும் பிரதிக்கினை நமக்கில்லை யென்பதனை யறிவித்தற்கும் என வுரைப்பினும் அமையும். "பிரதிக்கினை மேற்கோள் என்பன ஒருபொருட்கிளவி" என்பது தருக்க சங்கிரக வாக்கியம். பிரதிக்கினை-துணிவு. கூறு வினைத்தொகை. சூத்திரத்தின் கோள்-"சாரியை யுள்வழித் தன்னுருபு கெடுதல்" என்னும் இலக்கணம் பெற்ற இரண்டாம் வேற்றுமைத்தொகை. அல்லது ஆறுவது செயப்படுபொருளில் வந்தகாரகமெனினும்ஆம். கோள் முதனிலைத் தொழிற்பெயர். அது, என்பதற்கும் என எண்ணிநின்ற நான்கனுருபுகளுக்குப் பயனில்லையாயிற்று ; ஆக்கச்சொல் வருவிக்கப்பட்டது.

(சூ-௫௮) மொழிமுதற் காரண மாமணுத் திரளொலி
எழுத்தது முதல்சார் பெனவிரு வகைத்தே.

(குறிப்பு) தும்மலிருமல் முதலிய ஓசைகளில் அதிவியாத்தி நீக்குதற்கு, மொழிமுதற்காரண மென்றும், பொன்னன், கரியன், பொருப்பன், பூமிசை நடந்தோன் முதலிய பகுபதமொழிகளுட் பொன் முதலிய பகுதிகளும் மொழிமுதற்காரணமா மொலியாதலின் அவற்றில் அதிவியாத்தி நீக்குதற்கு, அணுத்திரளொலியென்றும் இலக்கணங்கூறப்பட்டது. அங்ஙனமாயின் ஙவ்வரியின் ஙா முதலிய உயிர்மெய் பதினொன்றும் மொழிமுதற்காரணமாகாமையால் அவற்றில் அவ்வியாத்தியாமெனில், ஆகாது; ஆங், இயங், ஆநங், லங், லிங், லுங், திங் என்றற்றொடக்கத்துவடமொழிக்குறியீடுகளும், நங், சிங், மங், வங் என்றற்றொடக்கத்து மந்திரமொழிகளும் நிலைமொழியாக உயிர்முதன்மொழிகள் பன்னிரண்டும் தனித்தனி வரு

மொழியாக வந்துபுணரும் தொடர்மொழியிடத்து நகரவுயிர்மெய் பன்னிரண்டும் மொழிமுதற்காரண மாதலாலெனவறிக. மொழியை விசேடியாதுமொழிமுதற் காரணமமெனப்பொதுப்படக்கூறினமை யால், தொடர்மொழிக்கண்ணும் காரணமாதல் விலக்காது கொள்ளப் பட்டது. எழுத்து-சாதியொருமை. என-எண்ணிடைச்சொல்.

(௬௯.) அம்முதலீராறு..................புலவர்.

(குறிப்பு) அம்முதல் பண்புத்தொகைநிலைக் களத்துப்பிறந்த அன்மொழித்தொகை: அகரமாகிய முதலையுடையன என விரியும். அகரத்தை முதலாகவுடையன என்றபடி. முதல் இங்கு எண்ணு முறையில் முற்பட்டு நிற்பது. இனி இவ்வாறன்றி முதலென்பது முற்பாட்டெல்லைப் பொருளுணர்த்துவதோர் சொல்லுருபெனினு மமையும். இதற்கு, அகரத்திலிருந்து என்பது பொருள். பின் வரும் கம்முதல் முதலியவற்றிற்கும் இஃதொக்கும். என-அநு வாதக்குறிப்பாகி எச்சப்பொரு ளுணர்த்துவதோ ரிடைச்சொல். இதனால் 'அம்முதலீராறுவி கம்முதன் மெய்ம்மூவாறு' என்பதனள வும் ஆசிரியர் புலவர்கூற்றை யநுவதித்தவாறாயிற்று. புலவர்-புரோ வாதகர்த்தா. விளம்பினர் பயனிலை. இங்ஙனம் விகற்ப முதலிய வேறுபயனின்றி முன்னோர் கூற்றுக்கூறுவதனை வழிபடற் பொரு ட்டென்பர் வடநூலார்.

(எக) ஐ ஔ இ உச்..................முறையே.

(குறிப்பு) முறையே யென்றமிகையால் இவ்விரண்டோரின மாதலேயன்றி இரண்டிறந்த பலவெழுத்துக்கள் ஓரினமாதலும் உண்டெனக் கொள்க. இதனால் உயிர்க்கணம், வன்கணம், மென் கணம், இடைக்கணம், குறில், நெடில், உயிர்மெய், மெய், வினா, சுட்டு என்பனவும் தனித்தனி இரண்டிறந்த பல கூடிய ஓரினமா மெனவுணர்க. இன்னும் முறையே யென்றமிகையால் முதலெழுத் துள்ளுஞ்சில இவ்விரண்டோரினமாகா வெனவறிக. அவை-யர, லவ, ழள, என்பனவாம்.

(எ௨) தானமுயற்சியளவுபோ..........பினமே.

இச்சூத்திரம் பின்னதநிறுத்த லென்னுமுத்தியால் இனவெழுத்துக்களுக்குப்பொது விலக்கணம் கூறுகின்றது.

(இ - ள்) தானமுயற்சியளவுபொருள்வடிவான—தானமுயற்சியளவு பொருள்வடிவுகள். ஒன்றுதி- ஒன்றுமுதலியன. ஓர்புடையொப்பு-சிறுபான்மையொத்தல். இனம் - இனவெழுத்திலக்கணம் (என்றவாறு)

(கு - பு) ஆன - அஃறிணைப்பன்மைக்குரிய எழுவாய்வேற்றுமைச்சொல்லுருபு. தானமுயற்சியளவுபொருள்வடிவான ஒன்றுதி என முதலுஞ்சினையுமடுக்கிநின்று இனம் என்னும் பயனிலைக்கு எழுவாயாகிய ஒப்பு என்னும் தொழிற்பெயர்ப் பயனிலைகொண்டன. இனம் எனப்பண்பு பண்பியாகவுபசரிக்கப்பட்டது. ஓர்புடை யொப்பு இனம் என்றமையால் இவற்றுள் ஒன்றேனும், சிலவேனுமொப்பாதலே இனவெழுத்திலக்கணமாமென்பது பெறப்பட்டது.

உதாரணம்:— தானத்தால் கசடதபற ஆறும்வல்லினமும், ஙஞண நமன ஆறும்மெல்லினமும் ஆயின. முயற்சியால் அ ஆ முதலிய முதலெழுத்திவ்விரண்டோரினமாயின. அளவால் குறிலும், நெடிலும், தனித்தனி ஓரினமாயின. பொருளால் சுட்டெழுத்து மூன்றும் ஓரினமும், வினாவெழுத்தைந்தும் ஓரினமுமாயின. வடிவால் மெய்பதினெட்டும் ஓரினமும், உயிர் பன்னிரண்டும் ஓரினமுமாயின. அளவாலும் இடத்தாலும் குற்றுயிரைந்தும் ஓரினமும் நெட்டுயிரேழும் ஓரினமும் ஆயின. இடத்தாலும் வடிவாலும் இடையெழுத்தாறும் ஓரினமாயின. மற்றும் இவ்வாறே கண்டுகொள்க. வடிவென்பது சாரியைபெற்றே இயங்குவதும், சாரியை பெற்றும் பெறாதியங்குவதுமாகிய செவிப்புலனும் ஒலிவடிவு.

இவ்வினங்களை எடுத்தாளுமாறு-'நெடிலோடாய்தம்' என்னும் சூத்திரத்தில் நெடில், உயிர், வலி, மெலி, இடை என்பனவும், 'குறியதன்கீழா' 'தனிக்குறின் முன்னொற்று' என்பவற்றிற் குறிலும், 'குற்றுயிரளபின்' எனக் குற்றுயிரும், 'நெட்டுயிர்க்காரமு' மெனநெட்டுயிரும், 'வினாச்சுட்டுடனும்' 'வினாச்சுட்டுற்ற' 'சுட்டுவகரம்' 'வவ்விறுசுட்டிற்கு' 'சுட்டின்முன்னாய்தம்' எனவினாவெழுத்துக்களும், சுட்டெழுத்துக்களும், 'ஒற்றுயிர்முதலீற்' றெனமெய்யுயிர்களும் எடுத்தாளப்பட்டமை காண்க.

இனி உயிர் பன்னிரண்டும் யரலவழளக்கள் ஆறும் கூடிய பதினெட்டும் தானத்தாலோரினமாமே யெனின்; அவைபதினெட்டனையும் உயிர்க்கணமென்றேனும் இடைக்கணமென்றேனும் கூறாது, மிடற்றினம் எனவேறுபெயர் கொடுத்து எடுத்தாளின் ஆம் என்க. அதற்காட்சி 'உயிரிடைவரி னியல்பும் முளை' 'உயிரும் யகரமுமெய்தின் வவ்வும்' 'ஆவியரமுன்' 'ஆவியரழவிறுதி' என்பவற்றில் மிடற்றினம் என வைப்பினும் மிடற்றினத்தின் முன்என நிமித்தம் கூறினும் பொருந்துமாறு காண்க. இவ்வாறே முயற்சியால் ஒப்புமையுடையன 'ரழவல்லன தம்முற்று முடனிலையும்' 'ரழத்தனிக்குறிலணையா' எனவும் 'லளவேற்றுமையிற்றடவும்' 'லளமெய்திரிந்த' 'குறில்வழிலள' 'குறில் செறியாலள' எனவும் எடுத்தாளப்பட்டுச் செய்கைக்குரியனவாதல் கண்டுகொள்க.

அகர ஆகாரங்களுடன் ஆய்தமும் சேர்ந்து மூன்றும் முயற்சியாலோரின மாகாவோவெனின்? அவைமூன்றும் சேர்ந்து செய்கைக்குப்பயன்படாமையாலும், கேடுபபவாமையாலும் அவற்றை ஓரினமெனக்கொள்ளுதலாலும் இனமில்லை யெனத்தள்ளுதலாலும் ஒரு பயனுமில்லை யெனவுணர்க. இவ்வாறேயுள்ள வடமொழி ஐகார ஔகாரங்களிரண்டும் நூல் நோக்கால் இனவெழுத்துக்களே என்பர் வடநூலார். அங்ஙனமாயின் அகர ஆகாரங்களிரண்டும் ஆய்தத்தை யொழித்து எவ்வாறோரினமாமெனின் அவை முயற்சியானும் தானத்தானும் ஓரினமாம் என்க.

(தொடரும்)

மதுரைத்
தமிழ்ச்சங்கம்
மதுரை.

திரு. நாராயணையங்கார்,
தலைமை உபாத்தியாயன்,
சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை.

கஉ௩ இம்மையாற் செய்ததை யிம்மையே யாம்போலு
மும்மையே யாமென்பா ரோரார்கா—ணம்மை
யெளிய ரெனநலிந்த வீர்ங்குழலா ரேடி
தெளியச் சுடப்பட்ட வாறு.

எ-து குறித்த பருவத்தின்கண் வந்த தலைமகனைப் புணர்ந்திருந்த தலைமகள் முன்பு தன்னை நலிந்த குழலோசை அந்திமாலைப்பொழுதின்கட் கேட்டதனுற் றுயருறதாளாய்த் தோழிக்குச் சொல்லியது.

இ-ள். இப்பிறப்பின்கட் செய்த தீவினை இப்பிறப்பின்கண்ணே விளையும்போலும்! மறுபிறப்பின்கண் ஆம் என்பார் அறியாதார்காண்; முன்பு நம்மை எளியரெனக்கொண்டு துயர்செய்த ஈர்ங்குழலார், தோழி! எல்லாரும் அறியச்சுடப்பட்டவாற்றைப் பாராய்; எ-று. (௩௧)

குழல்நலிவது நெருப்பாற் சுடப்பட்டுத் துளைப்பட்டபின்: சுடுண்டது பிறரை நலிந்ததாற் பயனென்று குழலைச்சொல்லுமாறென்னையெனிற் பிறரை நலியுந்தன்மை முன்பே அதற்குளதாதலாற் பட்டதெனக்கொள்க.

முல்லை முற்றியது.

ரு.--மருதம்.

கஉச செவ்வழியாழ்ப் பாண்மகனே சீரார்தேர் கையினு
லிவ்வகை யீர்த்துய்ப்பான் றேன்றுமு—னிவ்வழியே
யாடினு னய்வய லூரன்மற் றெங்கையர்தோள்
கூடினுன் பின்பெரிது கூர்ந்து.

எ-து பாணற்குத் தலைமகள் வாயின் மறுத்தது.

இ-ள். செவ்வழியாழையுடைய பாண்மகனே! சீரார்ந்த விளையாட்டுத் தேரினைத் தன் கையால் இம்மனையின்கண் ஈர்த்து நடத்துகின்ற என்மகன் பிறப்பதற்குமுன் இம்மனையின்கட் பிரியாது ஆய்வயலூரன் ஒழுகினுன் பின்னையெல்லாம் எங்கையர்தோளே மிக விரும்பி முயங்கினுன்; ஆதலான் இப்பருவம் யாம் அவர்க்குத்தக்கேம் அல்லேம்; எ-று. (க)

கஉரு மாக்கோல்யாழ்ப் பாண்மகனே மண்யானைப் பாகனுர்
தூக்கோற் றுடியோடு தோன்றுமுன்—றூக்கோற்
றொடியுடையார் சேரிக்குத் தோன்றுமோ சொல்லாய்
கடியுடையேன் வாயில் கடந்து.

இதுவுமது.

இ-ள். அழகிய *காம்பையுடைய யாழ்ப்பாணனே! மண்ணுற்செய்யப் பட்ட யானைப்பாகராகிய என்மகனுர் தாங்கொட்டுகின்ற தூக்கோற்றுடி யோடு இங்குத்தோன்றி ஒழுகுவதற்கு முன்புதூய புரிப்புச் செயல்களை யுடைய தொடியுடையார் மனையின்கட் சென்று தோன்றியொழுகுமோ சொல்லாய் இப்பொழுது; அவனுல் வரையப்பட்ட வாழ்வினையுடையேன் வாயில்கடந்து; எ-று. (உ)

கஉசு விளரியாழ்ப் பாண்மகனே வேண்டா வழையேன்
முளரி மொழியா துளரிக்—கிளரிநீ
பூங்கண் வயலூரன் புத்தில் புகுவதன்மு
ஞூங்க ணறிய வுரை.

இதுவுமது.

இ-ள். விளரி யென்னும் பண்ணைச் செய்கின்ற யாழையுடைய பாண் மகனே! யாங்கள் விரும்பாதன அழையாதொழிக: எங்கண்மாட்டு நினக்கு ஈரமில்லாத முளரிபோன்ற மொழிகளைச் சொல்லாது இங்கு நின்றும் புடைபெயர்ந்து கிளர்ந்து நீபோய்த் தாமரைப்பூப்போன்ற கண்களையுடைய வயலூரன் இன்று புதுமனையின்கண்ணே புகுவதன்முன் அப்புதுமனைக்கண் நீ சென்று வாராநின்ருன் என்று அவனுற் காதலிக்கப்பட்ட பரத்தையர்க்கு உரை; எ-று. (ந)

கஉஎ மென்கட் கலிவய லூரன்றன் மெய்ம்மையை
யெங்கட் குரையா தெழுந்துபோ—யிங்கட்
குலங்கார மென்றணுகான் கூடுங்கூர்த் தென்றே
யலங்கார நல்லார்க் கறை.

இதுவுமது.

இ-ள். மெல்லிய இடத்தையுடைய மிக்க வயலூரனுடைய மெய்யுரை களை எங்கட்குச் சொல்லாதே இங்குநின்று மெழுந்துபோய் இவ்வுலகத்தின் கட் குலமுடைய மனையாளைப் புணர்தல்*............................ (ச)

---

* பாணர் தம் பிறப்புணர்த்தற்கு ஓர்வகை மூங்கிற்கோல் கைக்கோடல் பண்டைவழக்கு: இதனை "நுண்கோல் கொண்டு களம்வாழ்த்து மகவன் பெறுகமாவே' (ரு-ந) என்னும் பதிற்றுப்பத்துரையானுணர்க; 'இருங் கழை யிறும்பி னுய்ந்துகொண் டறுத்த,நுணங்குகட் சிறுகோல் வணங்கிறை மகளிரோ, டகவுநர்' (கூஎ) என்ருர் அகநானூற்றினும்.

* இதன் பின்னுரையும், இனிவரும் பாடல்களினுரையும் பிரதிகளி லில்லை. சிலபாடல்களிலும் எழுத்துக்கள் விடுபட்டும் பிறழ்ந்தும் இருப் பன.

௧௨௮ செந்தா மரைப்பூ வுறங்கிமிர்ந்த செந்நெல்லின்
பைந்தார்ப் புனல்வாய்ப்பாய்ந் தாடுவா—ளந்தார்
வயந்தகம்போற் றேன்றும் வயலூரன் கேண்மை
நயந்தகன் ருற்றுமை நன்று. (௫)

௧௨௯ வாடாத தாமரைமேற் செந்நெற் கதிர்வணக்க
மாடா வரங்கினு ளாடுவா—ளீடாய
புல்லக மேய்க்கும் புகழ்வய லூரன்ற
னல்லகஞ் சேராமை நன்று. (௬)

௧௩௦ இசையுரைக்கு மென்செய் திரநின் றவரை
வசையுரைப்பச் சால வழுத்தீர்—பசைபொறை
மெய்ம்மருட் டொல்லா மிகுபுன லூரன்றன்
பொய்ம்மருட்டுப் பெற்ற பொழுது. (௭)

௧௩௧ மடங்கிறவு போலும்யாழ்ப் பண்பிலாப் பாண
தொடங்குறவு சொற்றுணிக்க வேண்டா—*முடங்கிறவு
பூட்டுற்ற வில்லேய்க்கும் பூம்பொய்கை யூரன்பொய்
கேட்டுற்ற கீழ்நாட் கிளர்ந்து. (௮)

௧௩௨ எங்கை யரிலுள்ளா னேபாண நீபிறர்
மங்கையரி லென்று மயங்கினுய்—மங்கையரி
லென்னு திறவா திவணின்னி ....
பின்னுரி லந்தி முடிவு. (௯)

௧௩௩ பாலையாழ்ப் பாண்மகனே பண்டுநின் னுயகற்கு
மாலையா ழோதி வருடாயோ—காலையாழ்
செய்பு மிடமறியாய் சேந்தாநின் பொய்ம்மொழிக்கு
நைபு மிடமறிந்து நாடு. (௧௦)

---

* "இறவுக்கலித்துப், பூட்டறு வல்விலிற் கூட்டுமுதற் றெறிக்கும்" (௯௬) என அகநானூற்றினும் "புலவுநுனைப் பகழியுஞ் சிலையு மானச், செவ்வரிக் கயலொடு பச்சிருப் பிறழும்" எனப் பெரும்பாணாற்றுப்படையினும் வருதல் காண்க.

கஙச கிழமை பெரியோர்க்குக் கேடின்மை கொல்லோ
பழமை பயனோக்கிக் கொல்லோ—கிழமை
குடிநாய்கர் தாம்பல பெற்றாரிற் கேளா
வடிநாயேன் பெற்ற வருள். (கக)

கஙரு என்கேட்டி யேழா யிருநிலத்தும் வானத்து
முன்கேட்டுங் கண்டு முடிவறியேன்—பின்கேட்
டணியிகவா நிற்க வவனணங்கு மாதர்
பணியிகவான் சாலப் பணிந்து. (கஉ)

கஙசு எங்கை யியல்பி னெழுவல்யாழ்ப் பாண்மகனே
தங்கையும் வாயு மறியாம—லிங்க
ணுளர வுளர வுவனோடிச் சால
வளர வளர்ந்த வகை. (கங)

கஙஎ கருங்கோட்டுச் செங்க ணெருமை கழனி
யிருங்கோட்டு மென்கரும்பு சாடி—வருங்கோட்டா
லாம்பன் மயக்கி யணிவளை யார்ந்தழகாத்
தாம்ப லசையின*வாய்த் தாழ்ந்து. (கச)

கஙஅ கன்றுள்ளிச் சோர்ந்தபால் காலொற்றித் தாமரைப்பூ
வன்றுள்ளி யன்னத்தை யார்த்துவான்—சென்றுள்ளி
வந்தையா வென்னும் வகையிற்றே மற்றிவன்
றந்தையார் தம்மூர்த் தகை. (கரு)

கஙகூ மருதோடு காஞ்சி யமர்ந்துயர்ந்த நீழ
லெருதோ டுழல்கின்றா ரோதை—குருகோடு
தாராத்தோ றாய்ந்தெடுப்புந் தண்ணங் கழனித்தே
யூராத்தே ரான்றந்தை யூர். (கசு)

கசo மண்ணார் குலைவாழை யுட்டொடுத்த தேனமதென்
றுண்ணாப்பூந் தாமரைப் பூவுள்ளுங்—கண்ணார்
வயலூரன் வண்ண மறிந்து தொடுப்பாண்
மயலூ ரரவர் மகள். (கஎ)

* 'வாய்தாழ்ந்து' பி-ம்.

கசக அணிக்குரன்மே னல்லாரோ டாடினே னென்ன
மணிக்குரன்மேன் மாதரா ளூடி—மணிச்சிரல்
பாட்டை யிருந்தயரும் பாய்நீர்க் கழனித்தே
யாட்டை யிருந்துறையு மூர். (கஅ)

கசஉ தண்கயத்துத் தாமரைநீள் சேவலைத் தாழ்பெடை
புண்கயத் துள்ளும் வயலூர—வண்கயம்
போலுநின் மார்பு புளிவேட்கைத் தொன்றிவண்
மாலுமா றுநோய் மருந்து. (கக)

கசந நல்வய லூர னறுஞ்சாந் தணியகலம்
புல்லிப் புடைபெயரா மாத்திரைக்கட்—புல்லியார்
கூட்டு முதலுறையுங் கோழி துயிலெடுப்பப்
பாட்டு முரலுமாம் பண். (உ0)

கசச *அரத்த முடீஇ யணிபழுப்பப் பூசிச்
சிரத்தையாற் செங்கழுநீர் சூடிப்—பரத்தை
நினைநோக்கிக் கூறினு நீமொழிய லென்று
மனைநோக்கி மாண விடும். (உக)

கசரு பாட்ட ரவம்பண் ணரவம் பணியாத
கோட்டரவ மின்னிவை தாங்குழுமக்—கோட்டரவ
மந்திரங் கொண்டோங்க லென்ன மகச்சுமந்
திந்திரன்போல் வந்தா னிடத்து. (உஉ)

கசசு மண்கிடந்த வைய...... மற்றுப் பெரியரா
யெண்கிடந்த நாளா னிகழ்ந்தொழுகப்—பெண்கிடந்த
தன்மை யொழியத் தரள முலையினாண்
மென்மைசெய் திட்டாண் மிக. (உங)

கசஎ செங்கட் கருங்கோட் டெருமை சிறுகனையா
லங்கட் கழனிப் பழனம்பாய்ந்—தங்கட்
குவளையம் பூவொடு செங்கயன்மீன் சூடித்
தவளையுமேற் கொண்டு வரும். (உச)

* 'இது தோழி செவ்வணியணிந்துவிட்டமை தலைவன்பாங்காயினார் கூறியது' என்றார் நச்சினார்க்கினியர் (தொல்-பொ-சற்-சஎ).

கசஅ இருணடந் தன்ன விருங்கோட் டெருமை
மருணடந்த மாப்பழன மாந்திப்—பொருணடந்த
கற்பெருங் கோட்டாற் கணைத்துத்தங் கன்றுள்ளி
நெற்போர்வு சூடி வரும். (உரு)

கசகூ புண்கிடந்த புண்மனுகின் னீத்தொழுகி வாழினும்
பெண்கிடந்த தன்மை பிறிதரோ—......கிடந்து
செய்யாத மாத்திரையே செங்கயல்போற் கண்ணிணை
யணையாது தானுணு மாறு. (உசா)

கரு௦ கண்ணுங்கா லென்சொல் கலவையாழ்ப் பாண்மகனே
யெண்ணுங்கான் மற்றின் றிவளொடுநே—ரெண்ணிற்
கடல்வட்டத் தில்லையாற் கற்பெயர் சேரா
ளடல்வட்டத் தாருளரோ லாம். (உஎ)

கருக சேறுடுங் கிண்கிணிக்காற் செம்பொன்செய் பட்டத்து
நீறுடு மாயுதிவ னின்முறு—வேறுய
மங்கையரி னுடுமோ மாக்கோல்யாழ்ப் பாண்மகனே
யெங்கையரி னுடலா மின்று. (உஅ)

கருஉ குலையானும் பூணானு *முன்கட்டாஞ் சேர்ந்த
விலையானு மிட்ட குறியை—யுலையாது
நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வ னிற்கு முனைமுலைப்பா
ரூர்சிதைக்கும் வேண்டா தழூஉ. (உகூ)

கருந துனிபுலவி யூடலி னேக்கேன் றொடர்ந்த
கனிகலவி காதலினுங் காணேன்—முனிவகலி
னுண நடுக்கு நளிவய லூரனைக்
காணுவெப் போதுமே கண். (ந௦)

மருதம் முற்றியது.

முனிந்தார் முனிவொழியச் செய்யுட்கண் முத்துக்
கனிந்தார் களவியல் கொள்கைக் —கணிந்தா
ரிணைமாலை யீடிலா வின்றமிழால் யாத்த
திணைமாலை கைவரத் தேர்ந்து.

திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும்
முற்றின.

---

* 'முன் கடஞ் சேர்ந்த' பி-ம்.

திணைமாலை நூற்றைம்பது மூலமும் உரையும்.

பிழைதிருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
கஉ	கஅ	வைத்,தார்	வைத்தார்
கச	உங	வரவினை	வரைவினை
,,	உச	பாக்கத்தார்க்	பாக்கத்தார்
கஎ	உஉ	ஒப்புவமை	ஒப்புமை
ககூ	உக	அடுப்பெல்லாம்	அடும்பெல்லாம்
உங	கங	சுங	சுங
உகூ	க0	மலைநாடாதலால்	மலைநாடு: ஆதலால்
,,	உஅ	குருந்தே:	குருந்தே
ஙங	உஎ	ஞனது	ஞஞது
ஙரு	உஅ	முகத	முகத்
ஙசா	ஙச	நீர்தேன்று	நீர்தோன்று
ஙஅ	கஉ	சொன்றுயேற்	கொன்றுயெற்
ச0	அ	நிமொழி	நின்மொழி
,,	ஙஉ	தானகக்	தாநகக்
சக	உகூ	பிரித்தற்கு	பிறித்தற்கு
,,	ங0	டாறுடை	பாணுடை
சஉ	அ	தலைமகன்	தலைமகள்
,,	கரு	ணீர் நிறை	ணீர்நின்ற
சச	ரு	வெங்கதிரார்	வெங்கதிராற்

விவசாய நூல்.

இரண்டாம் பாகம்.

பதினொன்றாவது அத்தியாயம்.

பயிர்செய்யும் விதம்.—*CULTIVATION.*

நான்முகம்.

இந்நூலின் முதற்பாகத்தில் (1) மண்ணின் உற்பத்தி, (2) மண்ணின் பல வகுப்புகள், குணங்கள், (3) மண்ணில் இருக்கவேண்டிய எரு, அவற்றின் விவரங்கள், (4) விவசாயத்துக்கு இன்றியமையாத் தண்ணீரின் குணங்கள், (5) பூமியைப் பண்படுத்தும் வகை, (6) பண்படுத்துவதற்கேற்ற கருவிகள், (7) கால்நடைகள், (8) கால்நடைகளைப் பாதுகாக்கும் முறைகள், (9) இந்த இராஜதானியில் விளையும் சில விசேஷப் பயிர்கள், (10) அவைகளை விளைவிக்குங்காலம், விவசாயத்தைப்பற்றிய பழமொழிகள் ஆகிய விவசாயத்துக்கின்றியமையா விஷயங்களைச் சங்கிரகமாகப் பத்து அத்தியாயங்களில் தெரிவித்திருக்கின்றோமல்லவா? இனி அவைகளைத் தொடர்ந்து இந்த இரண்டாவது பாகத்தில் நமது இராஜதானியின் பலவிடங்களில் விளைவாகும் அல்லது விளைவிக்கக்கூடிய சில விசேஷமான பயிர்களின் விவரங்களைச் சங்கிரகமாகச் சொல்லுகிறோம். அப்படிச் சொல்லுமுன் நமது குடியானவர்களுக்கு முக்கியமாகக் குறித்துக்காட்டவேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதாவது:—

புல்வகுப்பைச்சார்ந்த நெல், கோதுமை, சோளம், ராகி, கம்பு, தினை, சாமை முதலான தானியப்பயிர்களும், கோதுவகுப்பைச் சார்ந்த அவரை, துவரை, கடலை, உளுந்து, பீனிசு, தம்மட்டன், மொச்சை முதலான கோதுடைய பயிர்களும், நார்வகுப்பைச்சார்ந்த பரு

த்தி, சணல், புளிமஞ்சி, மருது முதலான நாரைத்தரும் பயிர்களும், தைலவகுப்பைச்சார்ந்த ஆமணக்கு, எள்ளு, கடுகு, இருப்பை முதலான எண்ணெயைத்தரும் பயிர்களும், கிழங்குவகுப்பைச்சார்ந்த உருளை, வள்ளி, சேனை, கருணை, மஞ்சள் முதலான கிழங்குப் பயிர்களும், சர்க்கரைவகுப்பைச்சார்ந்த கரும்பு முதலான பயிர்களும், இப்படியே இன்னும் பலவித இலை, பூ, காய், கனி வகுப்பைச்சார்ந்த பயிர்களும், ஆதியில் தத்தம் இனத்தில் ஒரேவிதமான பயிர்களாயிருந்தாலும்; பிறகு நாளடைவிலே காலதேச பூசார சீதோஷ்ணாதி வித்தியாசங்களினால் ஒவ்வொரு பயிரும் ரூபம், குணம், பெயர் முதலான வித்தியாசங்களைப் பெற்றுப் பிரகாசிப்பதுடன், அவற்றை விளைவிக்கும் காலமும் இடத்துக்கிடம் வித்தியாசப்பட்டிருக்கின்றன? ஆகவே, ஒவ்வோர் இடத்தில் விளைவிக்கும் காலவித்தியாசங்களைப்பற்றி விவரமாக எழுதினால் இப்புத்தகமும் பெரிதாகிவிடுமென்று எண்ணி, இக்கோயம்புத்தூர்க் குடிகள்சிலர் பயிர்களைப் பயிரிடும்போது அநுட்டித்து வரும் காலத்தைப் பெரும்பான்மையாகத்தழுவியும் மற்றவிடங்களின் பருவகாலங்களைச் சிறுபான்மையாகத்தழுவியும் இதில் எழுதத் துணிந்தோம்.

தானியப்பயிர் வகுப்பு.—*CEREALS &c.,*

விதைகள்.—*SEEDS.*

நமது நாட்டுக் குடியானவர்களுக்கு விதைத்தானியங்களைத் தக்கபடி பெரிய கதிர்களிலிருந்து தெரிந்தெடுத்துப் பாதுகாத்துப் "பட்டமறிந்து விதை" விதைக்கத்தெரியும். ஆனால், சோம்பேறிகள் சிலரும், ஏழைக்குடியானவர்கள் சிலரும் தங்கள் விதைத்தானியங்களைக் காக்கவேண்டியதைப்பற்றிக் கவனிக்கிறதில்லை. அதனால் விளையும் நஷ்டம் அதிகம். விதைகள் அல்லது விதைப்பதற்கு எடுத்துவைக்கும் தானியங்களுக்குக் கொஞ்சகாலம் ஓய்வு வேண்டியிருப்பதால், அவைகளை ஆற அமர விடவேண்டும். அப்

படி வைக்கும் விதைகளை மேற்புறமும், உட்புறமும் நல்ல நிறத்துடனிருக்கின்றனவாவென அடிக்கடி பார்த்தும், அவற்றின் வெளிப்புறத்துத் தோல் சுருங்காமலும், பூச்சிகளால் அடிக்கப்படாமலும், ஈரம்படாமலும் அடிக்கடி வெயிலில் போட்டும், காற்றுப்படும்படி வைத்தும், கூடுமாகில், சிலவிதைகளை அறுத்துப்பார்த்தும், மக்கி நாற்றமெடுத்துப்போகாமற் பாதுகாக்கவேண்டும். சில ஜாதி விதைத்தானியங்களைப் பரீக்ஷிக்கவேண்டுமானால், தண்ணீரிற் போட்டுப்பார்க்கலாம். நல்ல விதைகளாயிருந்தால் அவைகள் தண்ணீருக்குள் அமிழும்; கெட்டுப்போயிருந்தால் நீர்மீதில் மிதக்கும். முக்கியமாக விதைகள் ஈரமற்று உலர்ந்துபோக வெயிலிற் காயவைத்துப் பானையிலாகிலும், கோணிப்பையிலாகிலும் சேகரித்துப் புகைபடும் இடத்தில் வைப்பது உத்தமம். பானையில் வைக்கிற விஷயத்தில் முதலிற் சுண்ணாம்புத் தண்ணீரைப் பானைக்குள் பூசிக் காய்ந்தபிறகு விதைகளைப்போட்டு, சுண்ணாம்புத்தூள் அல்லது குயவன் சூளைச்சாம்பல் அல்லது நடுவீதிச்சுடுமண்ணை மேலே மெத்துப்போட்டு வைத்துப் பிரதி அமாவாசையன்றும் எடுத்து வெயிலில் உலரவைப்பது நல்லவழக்கம். சில விடங்களில் நெல்விதைகளைப்புன்கு இலைகளுடனும், சோளத்தை வேப்பிலையுடனும் கலந்துவைப்பதுண்டு.

நமது நாட்டுக் குடியானவர்களுட் சிலர், சில விதைகளைச் சாணிஜலத்திலாவது, பசு மூத்திரத்திலாவது, வசம்பு, சாம்பிராணி, பெருங்காயம் கலந்தாவது, பாலிலாவது, இலகு சுடுஜலத்திலாவது முன்னதாக ஊறவைத்து விதைப்பதுண்டு. இப்படிச் செய்வதனால் விதைகள் சிக்கிரம் முளைப்பதுடன், அதிக புஷ்டியுடனும், செழிப்புடனும் வளரும்.

ஐரோப்பா, அமெரிக்கா நாட்டார் விதைகளை வைக்கும் அறைகளை ஒட்டடை அடித்து சுத்தியாக்கிச்சுண்ணாம்பு அடித்து மைல்துத்தமாவை விதைகளோடு கலந்து வைத்துக் காப்பாற்றுவார்கள்; மேலும், விதைகளை விதைக்கும் போது மைல்துத்தத் தண்ணீரில் இரண்டுமணி நேரம் நனைத்துவைத்துப் பிறகு விதைப்பதுண்டு.

அதாவது 100 படி விதைகளை 10 நூ எடை மைல் துத்த ஜலத்தில் கலந்து விதைத்தால் பூச்சிகளணுகா. மேலும், ஒரு ஜில்லாவில் விளைந்த விதைகளை, வேறு ஜில்லாவிற் கொண்டுபோய் விதைத்தால் பயிர்கள் செழிப்பாயுங் கம்பீரமாயும் விளையும்.

நெல், ராகி, புகையிலை, மிளகாய் முதலிய சில பயிர்களை முதலில் தோட்ட நிலத்தின் செழிப்பான பாகத்தில், நல்ல எருவைத் தந்து அடர்ச்சியாக விதைகளை விதைத்து முளைப்பித்து பக்குவகாலங்கிட்டியவுடனே அவைகளுக்கென்று தயார்செய்திருக்கும் பாத்திகளில் நடுவதுண்டு. அதற்கு நாற்றெடுத்துப்பயிர் செய்த லென்று பெயர். இப்படியே சில பயிர்களைக் கண்களினாலும், சில பயிர்களைப் போத்துகளினாலும், சில பயிர்களைப்பதியங்களினாலும், சில பயிர்களை வேர்தளிர்களினாலும் பின்னும் பல பயிர்களைப் பலவிதங்களினாலும் பயிர் செய்யவேண்டும். இதுபோன்ற விஷயங்கள் அனேகங் குடியானவர்களுக்குச் செம்மையாகத் தெரிந்திருப்பதுடன் இன்னின்ன விதைகளை இன்னின்ன அளவாகவும், விதமாகவும் விதைக்க வேண்டுமென்ற சங்கதியும் அனுபோகசாலிகளான குடியானவர்களுக்குத் தெரிந்த விஷயம்.

நெல்—அரிசி—*PADDY.*

நெல் புல் கூட்டுப்புப்பயிரைச் சேர்ந்தது. இது யாதொரு தேக முயற்சியின்றியே ஜீரணமாகக் கூடியதாகவும், புத்தியுக்திஞான த்தை விருத்தி செய்யக்கூடியதாகவும், அடிக்கடி நோயுண்டாக்காத ஆரோக்கிய பத்தியபோஜன பதார்த்தமாகவுமிருப்பதால் பரதகண்டமாகிய இத்தேசத்தின் பெரும்பான்மையான பிரஜைகளின் போஜனப்பொருளாக இருக்கிறது. நெல் ஆதியில் இமயமலைச்சார்பில் ஒரு புற்பயிர் போல முளைத்திருந்ததை நாளடைவில் வேளாண்மைத் தொழில் விருத்தியினால், இதன் தானியம் பெருத்து இந்தியாவில் விருத்தியாக, பிறகு உலகமெங்கும் பாவும்படி செய்ததாக ஒரு சரித்திரக்காரர் சொல்லியிருக்கிறார். இதுபூசார வித்தியாசத்தினாலும், ஜல விசேஷத்தினாலும், பாஷைகளினாலும் பல ரூபங்களையும், குணங்களையும், பெயர்களையும் பெற்றது.

நெல்லின் பலவதுப்புக்கள்.

நமது நாட்டில் விளைவிக்கும் நெல்லில், 1 கார், 2 சம்பா, 3 குறுவை, 4 அன்னதானம், 5 அறுபதாங்கோடை, 6 மிளகி, 7 செம்மிளகி, 8 சீரகச்சம்பா, 9 சிறுமணிச்சம்பா, 10 சின்னச்சம்பா, 11 பெரியசம்பா, 12 வாடைச்சம்பா, 13 ஊசிச்சம்பா, 14 இலுப்பைச்சம்பா, 15 மல்லிகைச்சம்பா, 16 கம்பன்சம்பா, 17 கைவளைச்சம்பா, 18 குங்குமச்சம்பா, 19 குண்டுச்சம்பா, 20 கோடைச்சம்பா, 21 ஈர்க்குச்சம்பா, 22 புனுகுசம்பா, 23 துய்யமல்லிச்சம்பா, 24 மோரன் சம்பா, 25 பாலன்சம்பா, 26 சிவன் சம்பா, 27 செம்லிப்பிரியன், 28 பிசானம், 29 மலைகுலுக்கி, 30 மடுவிழுங்கி, 31 காடைக்கழுத்தன், 32 செம்பாளை, 33 பூம்பாளை, 34 முட்டைக்கார், 35 கடப்புக்கார், 36 வெள்ளைக்கார், 37 மோசனம், 38 மணக்கத்தை, 39 பிச்சைவாரி, 40 ஈசற்கோவை, 41 இறங்குமேட்டான், 42 தென்னெல், 43 வெண்ணெல், 44 அருஞ்சோதி, 45 பொங்கையோச்சாலி 46 பொன்கம்பி, 47 புளங்கல், 48 பெங்காளம், 49 பர்மான், 50 பைகோசம்பா முதலான அநேக ஜாதிகளுமிருக்கின்றன.

இந்தியாவிலிருந்து ஒரு ஜாதி நெல் ஒரு காலத்தில் மொரீசு தீவுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கிருந்து அமெரிக்காவில் கரோலேனு நாட்டில் விளைவிக்க அதற்கு காரோலேனு நெல் என்ற பெயர் வந்தது. இது எண்ணெய்ப்பசையால் பளபளப்பாக இருக்கிறது. இப்படியே காலதேச வர்த்தமானங்களைத்தழுவி நெல்லுக்கு அனேக புதுப்பெயர்களிடப்பட்டன.

நெற்பயிர்க்குத் தக்க நிலம்.

நெற்பயிரானது அதிகத் தண்ணீருள்ள இடங்களிலெல்லாம் மிகுதியாக விளையக்கூடினும், களிமண், செம்மண், நதியோர மணல் படுகை மிச்ரமண் முதலானவைகளே இப்பயிருக்கு ஏற்றவை.

நெற்பயிருக்கு வேண்டிய உழவு.

'நெல்லுக்கு நான்குழவு' என்னும் பழமொழி நம் நாட்டாருக்குத்தெரிந்த விஷயம். நெல் தொன்றுதொட்டுச்சேற்றில் விளையும்

பயிராகையால் இதற்குப் புழுதியுழவு கூடாது. மேலும், மண் மட்கவேண்டியதைக்கருதி நான்கு நாள் விட்டு விட்டு உழுதல் உத்தமம். நெற்பயிரின்வேர் ஓர் அங்குலம் வளர்ந்து பரவும் தன்மையுடையதாதலால் உழவுக்குத்தக்கபடி பயிர் விருத்தியாகும்.

நெற்பயிருக்கு ஏற்ற எருவகை.

எருக்கிலை, கொழுஞ்சி, அவிரி, ஆவிரை, வேப்பிலை, நொச்சி, வாகை, பூவரசு, புன்கு, வாதநாராயணுதி இலைகளும் ஆமணக்கு, வேம்பு, வேர்க்கடலை, இருப்பை, புன்கு, புன்னை முதலான பிண்ணுக்குகளும் போடலாம். ஒரு ஏகருக்கு மாட்டுஎருப் பத்துவண்டியாகவும், இலை எரு ஐந்து வண்டியாகவும், அல்லது தனி அவிரியாகில் மூன்று வண்டியும், வேர்க்கடலைப் பிண்ணுக்கு இரண்டு பாரமாகவும், தோற்கிடங்குமயிரை ஒரு வண்டியாகவும் உபயோகிக்கலாம். சீனு ஜப்பான் தேசங்களில் புளித்த மலத்தையும், ஐரோபா அமெரிக்கா தேசங்களில், எலும்புப் பொடி, பிரகாசிதம் கலந்த சுண்ணும்பு, சாம்பல், பலவகைப் பசுந்தாள், மீன் எலும்புத்தூள், பட்சிகளின் புழுக்கை முதலியவற்றையும் எருவாக உபயோகப்படுத்திவருகிறார்கள். நிலத்தில் களர் இருந்தால் பாச்சான், பிரண்டை, பனையோலைகளைப் போட்டு மிதித்து அதிகத் தண்ணீர் கட்டினுல் களர் எடுபட்டுப்போம்; பசுவின் எருவைப் போட்டால் சாதம் ருசியாக இருக்கும்.

நெல்லைக் கிணறு முதலான ஜலாதாரத்தினுல் வெயிற்காலத்திலும் பயிரிடக்கூடினும், பெரும்பான்மையான தென்னுட்டார் மழைக்காலத்தைக்கருதி கார்நெற்பட்டம், சம்பாநெற்பட்டமென்று இரண்டு பருவங்களை அநுசரித்துப் பயிரிடுவது சாதாரண வழக்கம். கார்ப்பட்டத்துக்கு மாசிமாதம் பத்துப் பதினைந்திலும், சம்பாப்பட்டத்திற்கு ஆடிமாதம் பதினைந்து இருபதிலும் வயலை உழுவது வழக்கத்திலுள்ளன. புழுதி நெல்லுக்கு ஆடிமாதம் நிலத்தை ஆறுதரம் உழுது மழைத்தண்ணீர் தங்க வரப்புக்களை உயர்த்துவதுண்டு.

முதற்போக நெல்.

விதைத்து நான்குவாரம் கடந்தபிறகு களைகளை யெடுப்பித்தும், போதுமான ஜலத்தை நிற்கவைத்தும், அடர்ச்சியாக இருக்

கும் பயிர்களை நீக்கியும், புரட்டாசி அல்லது செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் அறுவடை செய்வது வழக்கம். இந்தப் பயிரைத்தான் நெல்லின் முதற்போக மென்று சொல்லுவார்கள். ஆனால் கரூர்த் தாலூகாவைச் சார்ந்த நெரூர் முதலான சிலபாகங்களில் சம்பா நெல்லை முதற்போகமாகக் கொண்டு ஆடி (ஜூலை) மாதம் முதல் தை (ஜனவரி) மாதம் வரையில் நாற்றெடுத்து நட்டுப் பயிர் செய்தும், குறுவை நெல்லை இரண்டாம் போகமாகக் கொண்டு தை (ஜனவரி) முதல் சித்திரை (மே) மாதம் வரை விதை விதைத்தும் அல்லது நாற்றை நட்டும் பயிரிடுகிறார்கள். இந்த நெல் விதைகளை விதைப்பதிலும் வித்தியாசங்களுண்டு. ஈரோடு, கரூர், உடுமலைப் பேட்டை முதலான விடங்களில் நாற்றுவிட அதிகவிதைநெல் வேண்டுமென்றும், சில விடங்களில் வெற்று விதை விதைப்பதில் அதிகநெல் வேண்டு மென்றும் சொல்லிக்கொள்ளுகிறார்கள். அதாவது ஒரு ஏகர் நிலத்துப் பயிருக்கு நாற்றுவிட 30-முதல் 36-பெரியபடியும், வெற்று விதை விதைக்க 24-முதல் 60-பெரியபடியும் வேண்டுமென்பதாம். இப்படி விதைப்பதைப் பரீட்சை செய்து பார்த்ததில் இவ்வகை அளவு அனுவசியமென்று தெரியவந்தது. முதற் போக நெல்லை அறுத்துக்கொண்டபிறகு அந்த நிலத்தில் செங்கற்பட்டு, தென்னாற்காடு, தஞ்சை முதலிய இடங்களில் நரிப்பயறு அல்லது பனிப்பயற்றைப் பயிர் செய்கிறார்கள். இதன் இலைகள் நன்செய்க்கு நல்ல எருவாகவும் உதவுகின்றன.

கடப்பை ஜில்லாவில் நெல்வயல்களில் கம்பு, சணல், எள், மொச்சை, முத்துக்கொட்டை, அவரை, துவரை, பச்சைப்பயறு, வெண்டை, பூசணி முதலியவற்றைப் பயிரிட்டுப் பலனெடுத்து, அவற்றின் தாள், கொடி, இலைகளை அங்கங்கே எருவாக உபயோகிப்பதுண்டு. சிலர் அவிரியைப் பயிரிட்டும், கொள்ளைப்பயிரிட்டும், பச்சிலை எருவாக உழுது வருகிறார்கள். இப்படிச் செய்வதனால் வயல்கள் வெயிலினாற் காய்ந்து கெட்டுப் போகாமல் செழுமையாக இருக்கும். இவ்விதமாக நெல் வயல்களிற் பயிரிட்டு நிலத்தின் கொழுமையைக் காக்கக்கூடாதவர்கள், நெல் அறுப்பானவுடனே உழுது போட்டால் உத்தமம்.

இரண்டாம் போக நெல்.

நிலத்தில் முதற்போகமாக நெல் அல்லது இராகி அல்லது புன்செய்ப்பயிர்கள் அறுவடையான பிறகு பயிரிடுவது குறுவை அல்லது சம்பா நெல்லாம். காவிரி வாய்க்காற் பாய்ச்சலில் இருக்கும் ஈரோடு முதலான சில இடங்களிலும், அமராவதி வாய்க்காற் பாய்ச்சலிலிருக்கும் கரூர்முதலான சில விடங்களிலும், இரண்டாம் போகமாகப் பயிரிடுவது சம்பாநெல். இதற்கு புரட்டாசி (அக்டோபர்) அல்லது ஐப்பசி மாதம் நாற்றுவிட்டு பயிர்செய்து முதற்போகம் விளைந்த பூமியைத் தக்கபடி உழுது ஈரமாக்கியும், பச்சை எருக்களால் வளமாக்கியும், ஐப்பசி கார்த்திகை (நவம்பர் டிசம்பர்) மாதங்களில் நாற்றை நடுகிறார்கள். பொள்ளாச்சி உடுமலைப்பேட்டையின் சில பாகங்களில் கோடைமழையினால் அதிக ஜலங்கிடைக்குமென்று, ஆனி (ஜூன்) மாதத்தில் விதைவிதைத்து புரட்டாசி (செப்டம்பர் அக்டோபர்) மாதங்களில், அறுவடை செய்கிறார்கள். ஆனால் கரூர் முதலான சிலவிடங்களில், சம்பா நெல்லும், குறுவை நெல்லும் பனிக்காலப் பயிராகக் கொண்டு கார்த்திகை (நவம்பர்) மாதம் நாற்றை நட்டு மாசி பங்குனி (மார்ச்சு) மாதங்களில் தோட்டங்களில் பயிர் செய்கிறார்கள். இந்தப் பயிர் தொண்ணூறுநாட் பயிராகையினால் அடிக்கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்து கிட்டத்தட்ட ஏழடி உயரமான தண்ணீரைக்கட்டிவருகிறார்கள். தெய்வானுகூலமாக நல்ல மழையும் பெய்துவிட்டால் நெல்லுக்கு ஆறங்குல மழைநீரும் கிடைக்கும். இந்தப் பிராந்தியங்களின்பூமி, வளம்பொருந்தியதாயிருப்பதினால், நெல்விளையும் வயல்நிலத்தைப்பார்க்கிலும், இந்தத் தோட்ட நிலங்களில் நல்ல லாபம் கிடைக்கிறது. அதாவது ஒரு ஏகர் நிலத்தில் 3000முதல் 4300ராத்தல் நெல் கிடைக்கலாம். இப்படிக் காண்பதற்குக்காரணம், சாதாரண நெல்வயல்களில் விளையும் பயிர்களைப் பார்க்கிலும், இந்தத்தோட்ட நிலங்களில் விளையும் நெற்பயிருக்கு அடிக்கிளைகள் அல்லது தூறுகள் அதிகரிப்பதனால் இப்பயிர் அதிக ஆதாயம் காண்பதாகவும் எண்ண வேண்டியிருக்கிறது.

ஆற்றுப்பாய்ச்சலில் பயிர்கள் போதைஏறிக் கெடுவதன்றியும், பயிருக்குவேண்டிய எருக் கிடைக்கிறதில்லை. கிணற்றுப்பாய்ச்சலில்

உ

கடவுள்துணை.

சுகசந்தர்சன தீபிகை.

முதல் அதிகாரம்—நிலம்.

Chapter I.—Land.

பூமியின் மேற்பாகமாகிய நிலத்திலே தான் மானுடஜன்ம மெடுத்த நாமெல்லோரும் வசிக்கின்றோம். நாம் எந்த நிலத்தின்மேல் வசிக்கின்றோமோ அந்நிலத்தின் நிலைமையும் குணங்களும் நமது சரீர சௌக்கியத்துடன் சம்பந்தப்பட்டிருக்கின்றன.

நிலத்தின்கண் உலோகங்களும், ஔஷதிவர்க்கங்களும், பிராணிவர்க்கங்களும், இவைகளின் கழிவுகளும் மடிந்திருக்கலாம். இவ்வித கலப்புக்கள் கலந்த மண்ணின் இடையில் வாயுவும் ஜலமும் காணப்படலாம். மண்ணிற் கலந்த வாயுவாலும் மண்ணிற்கலந்த ஜலத்தாலும் விளையும் சுகாசுகங்களைப் பற்றிவிசாரிப்போம்.

மண்ணிற் கலந்த வாயு;—சூரியகாந்தியாலும் உஷ்ணத்தாலும் மண்ணின் கீழ் நிற்கும் வாயு சலனப்பட்டுக் கொண்டே யிருக்கின்றது. சில வேளைகளில் மழையாலும் இவ்வித சலன முண்டாகலாம். ஏனெனில் மழைபொழிந்து சலம் அதிகமாகிப் பூமியில் ஊறினும் பூமியினுள்ளடங்கியிருந்த வாயு தான் நிற்கவிடமில்லாமற் சரேலென்று வெளிக்கிளம்பும். நாம் ஒரு பள்ளத்தை மண் கொட்டித் தூர்த்து அதில் ஒரு புது வீடு கட்டுவோமானால் மண் ஆழ்ந்து தளம் சரிப்படுகிற வரையில் அவ்வீட்டிற் பரிசுத்தமான காற்று இருக்கமாட்டாது. இக்காரணத்தாற்றான் சில சமயங்களிற் புதுவீடு தேகத்துக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்று ஜனங்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையே. ஏனெனில் அவ்வீட்டின் கீழ் அடங்கியிருந்த காற்றுக் கொஞ்சங்கொஞ்சமாக வெளிக்கிளம்பி நீங்கியபிறகு தான் அவ்வீடு வாசயோக்கியமாகும். ஆகையால் நாம் வசிக்கும் வீட்டின் அடிக்காற்று மேற்கிளம்பாத வண்ணம் தரையை நன்றாகக் கெட்டிப் படுத்தவாவது தளம் போடவாவது வேண்டும் என்பது நமது சரீரசௌக்கிய முறைகளில் முக்கியமானது. இவ்வித சௌக்கியத்திற்காகவே சில நாடுகளில் வீடுகள் கட்டும் பொழுது முதல் தளத்தை கமான்களாக வளைத்து அடியிலிருந்து உண்டாகும் காற்றுப்போக்கை வீட்டில் சம்பந்தப்படாமல் விட்டு, அக்க

மான்களின் மேற்புறத்தைப் பிரதான தளமாகச்செய்து வீடு கட்டுகின்றனர்கள். பட்டணங்களில் சிமென்ட்டு (ஒரு வகைக்கலவைச் சுண்ணும்பு) முதலான சாதனங்களால் வெகு அழுத்தமான தளம் போட்டுக் கட்டப்பட்ட வீடுகள் பெரும்பாலும் அதிக சௌக்கியமாக விருப்பதற்குக் காரணம், அடிக்காற்று மேற்கிளம்பி வீச வழியில்லாமலிருப்பதாலும் நாற்றங்கள் எளிதில் அலம்பிவிடப்பட்டு நீக்கப்படுவதாலும் என்று சொல்லலாம்.

உடம்பிற்கு ஜ்வரம் முதலிய நோயை விளைவிப்பதிற் பெயர்பெற்ற பிரதேசங்களில் நாம் எப்பொழுதாவது வசிக்கும்படிநேரிட்டால், நாம் வசிக்கும் பூமியின் மேற்புறத்தை நெருக்கமாக வைக்கோற் போட்டு மூடி அதன்மேல் வசிப்பதால் விஷவாயுவின் உபத்திரவத்தைக்கொஞ்சம் நீக்கிக் கொள்ளலாகுமென்பது சுகசந்தர்சன சாஸ்திரிகளின் கொள்கை.

ஓஷதிவர்க்கங்கள், பிராணிவர்க்கங்கள் இவைகளினுடைய சழிபொருள் முதலியன மட்டும் கலந்திருக்கும் பட்சத்திற் பொலபொல வென்று உதிரும் குணமுள்ள மட்தரையின்மேல் வசிப்பதே எப்பொழுதும் ஆரோக்கியம்; ஏனெனில் அத்தரை எப்பொழுதும் காய்ந்த தரையாகவேயிருக்கும்; ஆனால் அக்கம்பக்கங்களில் விஷவாயு சம்பந்தம் பூமிக்குள்ளிருக்குமாயின் இறுகலில்லாதமண்வழியாக நமது வாசஸ்தானத்தில் அவ்வாயுவெளிக்கிளம்பலாமாகையால் நாம் அவ்விஷயமாகவும் ஜாக்கிரதையாக விருக்கவேண்டும்.

மண்ணிற்கலந்த ஜலம்:—மண்ணிற் கலந்துநிற்கும் ஜலத்தை நாம் ஈரம் என்றும் கசிவு என்றும் பிரிக்கலாம். மண்ணின் இடைவெளியிற் கொஞ்சம் காற்றும் கொஞ்சம் நீரும் கலந்தால் ஈரம் என்பது உண்டாகின்றது. கசிவு என்பதில் மண்ணின் கணங்கள் காற்று என்பதின்றி நீரில் நெருங்கி மிதப்பதாம்.

ஈரம் அதிகம் குறைவு என்பது ஒவ்வோரிடத்தின் மண்ணின் இயற்கையை அநுசரித்திருக்கிறது. சிலமண்கள் நீரை அதிகமாகத்தமக்குள்ளேயே இழுத்துக்கொண்டு அந்நீரைக்கீழ்நோக்கிச் செல்லும்படி செய்துகொண்டிருக்கலாம்; சில மண்களில் நீர் கீழ்நோக்கிச்செல்லும் வல்லமையில்லாமலிருக்கலாம். ஈரம் மழையாலும் கசிவாலும் உண்டாகலாம். மண்ணின் குணமிருவகையாம் : அபேத்யம், பேத்யம் என. (1) ஜலம் எளிதில் நுழையக்கூடாத அதாவது இறங்கமுடியாத மண்ணை அபேத்யம் என்று சொல்லவேண்டும்; களிமண் இவ்வகையைச் சேர்ந்தது. (2) ஜலம் எளிதில் இறங்கக்கூடிய மண்ணை பேத்யம் என்று சொல்லவேண்டும். மணற்றரைமுதலியன இவ்வகையைச்சேர்ந்தவை. மழைநீர் தரையிற் சுவறுவ

தற்கும் சுவறுமைக்குங் காரணம், தரை பேத்யமாயும், அபேத்மாயு மிருப்பது மட்டுமல்ல: தரை பள்ளமா மேடா? என்பதையும்யோசிக்கவேண்டும். மழை, வெய்யிற்காலத்து மழையா அல்லது மாரிக்காலத்து மழையா என்பதையும்: அதிகமழையா, குறைந்த மழையா என்பதையும் நிதானிக்கவேண்டும். இவைகளை யெல்லாம் நாம் யோசித்துப்பார்க்குமிடத்தில் மழை நீர் வேகமாக பூமியிற் சுவறுவதும், மெதுவாக உள்ளடங்குவதும் நமக்கு ஒருவாறு தெளிவாகும். அப்பொழுது ஈரத்தின் காரணமும் நமக்கு நன்றாக விளங்கும்.

ஈரம் என்பதுமழையில்மாத்திரமன்று கசிவாலும் உண்டாகின்றதென்பதை நாம் முன்னமே சொல்லியிருக்கின்றோம். கசிவுண்டாகுமிடத்தினின்று நீர் வெளிக்கிளம்பி ஈரத்தை உண்டாக்கும், கசியும் நீர் பூமிக்குள் பலவிடங்களில் பலவிதமான ஆழங்களில் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருக்கும். அது அவ்வாறு வெளிக்கிளம்புவதும் கிளம்பாததும் தரை அபேத்யம் அல்லது பேத்யம் என்பதையும், நிலம் உத்சர்ப்பிணி (ஏற்றம்) அல்லது அவஸர்ப்பிணி (தாழ்வு) என்பதையும் சேர்ந்தது. கசிவு நீரை ஆகர்ஷிக்கும்சக்தி மரங்களின் வேர்களுக்கு அதிகமாகவுண்டு. இவைகள் ஆகர்ஷிப்பதுமட்டு மல்ல: பூமிக்குள் அடங்கிநிற்கும் நீர் பூமிக்குள்ளேயே வேகமாகஓடிப் பெரியநதிகளிலும் சமுத்திரத்திலும் சேராமல் தடுக்கின்றன. பூமிக்குள் இடைவிடாது நீரோட்டமிருக்கின்றதென்றும் அதுவழியே பூமிக்குள்ளடங்கியிருக்கும் சலம் ஓடி நதிகளிலும் சமுத்திரங்களிலும் பாய்கின்றதென்றும் தத்வசாஸ்திரிகள் சொல்லுகின்றார்கள். நமது ராஜதானியில் நீலகிரிஜில்லாவில் அநேகவிடங்களிற் சதுப்பு நிலங்களிருக்கின்றன. அவைகள் ஒன்றற்கு முதவாமல் அவைகளுக்குச் சமீபத்திற் குடியிருந்தவர்களுடைய தேகசுகத்தையும் கெடுத்துக்கொண்டு முன்னொருகாலத்திலிருந்தன. அந்நிலங்களிலெல்லாம் அவைகளின் சொந்தக்காரர்கள் கர்ப்பூரமரம் வைத்துப் பயிர்செய்து அச்சதுப்பு நிலங்களைக் கர்ப்பூரமரத்தோட்டங்களாக மாற்றினார்கள். இம்மரமோ வெகுசீக்கிரமாக வளருவதுடன் சதுப்புநிலத்தின் தீமையை அகற்றவென்றே கடவுளாலுண்டாக்கப்பட்ட மரம்போல காணப்படுகின்றது: இப்பயிர் ஒரு பிரயோஜனமுமில்லாமலிருந்த அந்நிலங்களை வெகு செழுமையான தோட்டங்களாக மாற்றி அந்நிலக்காரர்களுடைய பொருளைப்பெருக்கியதுடன் அவ்விடத்திய கசிவையும் நன்றாக இழுத்து அக்கசிவாலுண்டாயிருந்த சௌக்கியக்குறைவையும் முற்றும் நீக்கிற்று.

கசிவதிகப்படுவது அல்லது குறைவது என்ற கசிவின் மாறுபாடுகள், மழை அதிகமாகப் பொழிவது அல்லது பொழியாதது, கசிவு சம்பந்தமா

னவிடம் சமுத்திரத்திற்கோ அல்லது நதிக்கோ சமீபத்தில் அல்லது தூரத்திலிருப்பது இவைகளைப் பெரும்பாலும் சம்பந்தப்பட்டிருக்கின்றது.

ஈரத்தாலும் கசிவாலும் விளையும் நோய்கள்;—காய்ந்ததரையில் வசிப்பது சௌக்கியம் என்பதும் ஈரத்தரையில் குடியிருப்பதினால் சிலேஷ்மரோகங்கள், கபரோகங்கள், சந்திவாதரோகங்கள் இவைகளெல்லாமலும் இன்னும் பலவிதரோகங்களும் உண்டாகின்றனவென்பதும் எல்லாரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஈரத்தரையில் வசித்தால் நமது சுவாசாசயம் (Lungs) கெட்டுக் காசம் முதலிய ரோகங்களை நமக்கு உண்டாக்கும். முறைச்சுரங்கள், விஷசுரங்கள், வயிற்றிற் கட்டி இவைகளெல்லாம் இக்காரணத்தாலேயே விளைகின்றன. விஷபேதி முதல்முதல் தோன்றுமிடம் ஈரநிலமானவிடமாகவேயிருக்கு மென்பது சில பிரசித்த வைத்தியர்களின் கொள்கை.

கசிவு நிலங்களுக்குச்சமீபத்தில் வசிப்பதால் முற்கூறிய எல்லா வியாதிகளும் நமக்குண்டாவதுடன் சீதபேதி, சின்னம்மை, விஷஜ்வரம் முதலிய நோய்களும் உண்டாகின்றன.

நிலத்தின் அங்கங்கள்;—நாம் வசிக்குமிடம் மலைநாடா, சமதரையா? மலைநாடாயிருந்தால் மலையின் உயரமென்ன, வடிவமென்ன? சமதரையாயிருந்தால் மேடான தரையா, அல்லது பள்ளத்தாக்கா? அத்தரைக்கு நீர் பாயும் கால்கள்யாவை, நீர்வடியும் கால்கள்யாவை? என்பவற்றை நாம் யோசிக்கவேண்டும்.

நீலகிரிக்குப் போகும்வழியில் பாளிஎன்றோரிடமிருக்கின்றது. அங்கு நின்றுபார்த்தால் நம்மைச்சுற்றி நான்கு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டாத உயரமுடையனவாக மலைகள் ஓங்கிநிற்கும். விருக்ஷங்கள் அடர்ந்து நடுப்பகலிலும் இருள் மண்டியகாடுகள் அங்குப்பல உள. அவ்விடத்தில் வழிப்போக்கர்கள் ஓரிரவுதங்கினால் உடனே ஜ்வரம்வந்துவிடும். நீராதபடி அங்கேதாமதிப்பவர்களுக்கெல்லாம் வயிற்றிற்கட்டியுண்டு: ஏன்? மலைப்பிரதேசங்களில் நாம் வாசம்பண்ணும்படிவந்தால் நான்குபக்கங்களிலும் மலைகள் மூடிய அரண்ணியப்பிரதேசங்கள் நமது தேக சௌக்கியத்திற்கு ஒருபொழுதும் ஒவ்வாதவைகள் என்பதை நாம் உறுதியாகக் கைப்பற்றவேண்டும். அவ்விடங்களிற் காற்றோட்டம் கலகலப்பாக வில்லாமல் எப்பொழுதும் தகையப்பட்டேயிருக்கும்; அரண்ணியங்களில் உதிரும்சருகுகள் அழுகிய துர்க்கந்தமும் விஷமும் நிரம்பியகாற்று இவ்விதமானவிடங்களில் எப்பொழுதும் சலனமின்றியிருக்கின்றபடியால், இவ்விடங்கள் தேக சௌக்கியத்திற்கு

ஒருபொழுதும் ஒவ்வாதவைகள். மலையடிவாரங்களுக்கும் பெரும்பாலுமப்படியே. நிலமட்டத்துக்குக் கீழ்ப்பட்ட பள்ளத்தாக்குகளும் அவ்வாறே.

நீலகிரியில் ஒத்தையென்னுமூர் எல்லா விதத்திலும் சௌக்கியமாக விருப்பானேன்? அந்த ஊரைவிட்டு 10 மைல் கீழே இறங்கினால் எல்லாவிடங்களும் அசௌக்கியமாக விருப்பானேன்? மலைப் பிரதேசங்களிற் கொடுமுடியிலிருக்கும் நகரங்கள் நல்ல காற்று, ஆகாயத்திலிருந்து நேராக நமக்குக் கிடைக்கும் ஜலம், இவ்வித சௌக்கியங்களை அடைந்திருக்கின்றன. அவ்விடத்துள்ள காற்று மற்றவித விலக்குகளாற் றடைப்படாமலும், அங்குள்ள ஜலம் பூமியில் விழுந்து பலவித சருகுகள் புதைந்த காடுகள் வழியாய் ஓடிக்கெடாமலும் நமக்கு எல்லாவிதப் பரிசுத்தத்துடனுங் கிட்டுகின்றன. அதே நீலகிரிக்காற்றுப் பாளியென்னுமூரில் விஷக்காற்றாக மாறிவிடுகின்றது. அதே நீலகிரி ஜலம் 30-மைல் அரண்ணியங்களில் அழுகிய சருகுகள் மேலோடி, பவானியாறாகப் பெருகி மேட்டுப்பாளையத்திற் பலவித நோய்களை விளைவிக்கின்றது.

மலையில் உன்னதஸ்தலம் எவ்வாறு சௌக்கியமோ அதுபோலவே சமதரையிலும் கொஞ்சம் மேட்டுப் பாங்கான தரை தேகாரோக்கியத்தைக் கொடுக்கும். சமதரையில் காடுகள் தோட்டங்களிவைகள் சிலவேளைகளில் சௌக்கியத்தைக் கொடுக்கின்றன. தரை உலறுவதை மரநிழல் தடுக்கின்றபடியால் ஈரநிலங்களில் இவ்விதத் தோட்டங்கள் சௌக்கியத்தை விளைவிக்க மாட்டா. அவ்விடங்களில் நாமிருக்கும்படி நேர்ந்தால் காட்டைக் கொஞ்சம் கழித்து சூரியகிரணங்கள் தோட்டங்களின் தரையில் நன்றாகப் படும்படி செய்ய வேண்டியது வெகு அவசியம். எல்லாவிடங்களிலும் நமது தோட்டத்தை நாம் சரியாகக் கழித்து, வேண்டிய நிழலுக்கும் பசுமைக்குங் குறைவில்லாமல் பழுத்துஉதிர்ந்த சருகுகளை யகற்றி எரித்துச் சீராக வைத்திருப்போமானால் உஷ்ணதேசமாகிய நமது தேசத்திற் சென்னைபோன்ற சமதரையி லமைக்கப்பட்ட விடுதிகளில் வசிக்கப்பட்டவர்கள் சுகமாக விருக்கலாம். விருக்ஷங்கள் அதிகமாக அடர்ந்திருப்பது வாயுவின் சலனத்தைத் தகைக்கின்றபடியால் அவ்வாறு அடர விடாமல் நாம் பார்க்கவேண்டும்.

விருக்ஷங்களை நமது வாசஸ்தானத்துக் கருகில் நாம் வைத்துக்கொள்ளுவதும் அல்லது அவ்வாறிருக்கும் மரங்களை நாம் வெட்டி விடுவதும் நமது பகுத்தறிவைக்கொண்டு நாம் செய்யவேண்டிய விஷயமாகவிருக்கின்றன. காப்பித் தோட்டத்தில் மலர் உண்டாகும் காலத்தில் அம்மலரின்

மணம் காய்ச்சலை உண்டாக்குகின்றது என்ற உண்மை எல்லாருக்கும் தெரியும். அந்தக்காலங்களில் அத்தோட்டங்களில் ஜனங்கள் வசிக்கிறதேயில்லை.

ஆகையால் நமது வாசஸ்தானங்களில் விருக்ஷங்கள் அடர்ந்திருந்து, காற்றின் சலனத்தைத் தகைப்பது சுகக்குறைவாம்.

நிலத்தின் நிறம்:—கரிசல்மண் சூரியனுடைய உஷ்ணத்தை அதிகமாகக் கிரகிக்கின்றது. கரிசல் மணற்றரையாகவிருந்தால் அங்குண்டாகும்உஷ்ணத்திற்கு அளவேயில்லை. மணற்றரையோ எல்லாவித ஈரத்தையும் முற்றிலும் இழுத்துவிடும் என்பது எல்லாருக்கும் தெரிந்தவிஷயம். எல்லாவித மண்ணிலும் ஓஷதிவர்க்கங்கள் பிராணிவர்க்கங்கள் இவைகளின்கழிபொருள்கள் கலந்திருக்கின்றன. ஆற்றுப்படுகைகளில் மடிந்து மக்கிக்கிடக்கும் பூண்டுகளும் பூச்சிகளும் கணக்கிட முடியுமா? இவ்வாறு மடிந்த வஸ்துக்களடர்ந்த தரையில் வெப்பத்தாலும் வெள்ளத்தாலும் உண்டாகும் நாற்றத்தாலும் காற்றினுலும் எவ்வளவு விதநோய்கள் விளையலாம். இவ்வாறிருக்கும் தரைகளை உபத்திரவமில்லாதவைகளாகப் பண்ண அவைகளின்மேற் பயிரிடுவதே நேரானவழி யென்று சொல்லப்படுகிறது. இதே காரணத்தாற்ருன் பட்டணங்களிற் குவிக்கப்படும் குப்பைகளையும் மற்றமலங்களையும் தேகசௌக்கியத்திற்கு இடையூறுபண்ணுமலிருக்கவேண்டிப், பட்டணங்களுக்கடுத்த கொஞ்சதூரத்தில் புலங்களுக்கும் தோட்டங்களுக்கும் எருவாக உபயோகப்படுத்துகின்றுர்கள். இவ்வாறுசீராகப்பயிரிடப்பட்ட தோட்டங்களாலும் அவைகளிற் போட்டு மூடப்படும் குப்பைகளாலும் தேகசௌக்கியத்திற்குத் தீங்கு உண்டாகமாட்டாது. ஆனுல் எப்பொழுதும் நீர் நிற்கும் பயிர்களுக்குச் சமீபத்தில் குடியிருப்பது தேகசௌக்கியத்திற்குக் குறைவென்றே சொல்லவேண்டும். ஏனெனில், நெற்பயிர் விளையும் வயல்கள்போன்ற நிலங்களிலிருக்கும் ஜலம் உஷ்ணத்தால் எப்பொழுதும் சோஷித்துக்கொண்டேயிருப்பதுடன் நோய்க்காதாரமான பலவித மலங்களும் ஆகாயத்திற் கிளம்பிக்கொண்டேயிருக்கின்றன; ஆனதுபற்றி நாம் நெற்பயிர்விளையும் வயல்களுக்குக் கொஞ்சம் தூரத்திலேயே வசிக்கவேண்டும்.

நாம் புதுவீடுகட்டுவதாகவிருந்தால் நமது நிலத்திலிருக்கும் பள்ளங்களைக் கண்டகுப்பைகளைப்போட்டு நிரப்புகின்றோம். பட்டணங்களுக்குச் சமீபத்திற் பெரும் பள்ளங்களிவ்வாறு நிரப்பப்பட்டுக்கொஞ்சகாலத்திற்குப் பிறகு வீடுகட்டக்கொடுக்கப்படுகின்றன. அவ்விதமாயுண்டாகும் வீடுகளில் அடியிலிருந்து கிளம்பும் விஷவாயுவைப்பற்றி நாம் முன்னரே சொல்லியிருக்கின்றோம். ஆனுல் அவைகள் எப்பொழுதும் வசிக்கக்கூடாத வீடுகளா

என்று சந்தேகம் உண்டாகலாம்; அதுவல்ல நமது சித்தாந்தம். புதிதாய்க் கட்டப்பட்ட வீடுகள் அவ்வாறு இரண்டொரு வருஷமிருக்கலாம். சிறுகச் சிறுகப் பூமிகெட்டிப்பட்டு அடியிலிருக்கும் காற்றை வெளிக்கக்குவதாலும் நல்லமழை பொழிந்து அவ்வாயுவை அகற்றுவதாலும் அவ்விதமான வீடுகள் பரிசுத்தமாய் விடும். இவ்வாறு குப்பைகொட்டி மூடப்பட்ட இடங்களில் வீடுகட்டுவது நியாயமல்லவென்றாலும் நிராமலே அடிக்கடி சம்பவித்துக் கொண்டிருக்கின்றபடியால் அவ்வாறு கொட்டிமூடுவதை வெகு சாக்கிரதையாக நடத்த வேண்டும்.

புதுவீடுகட்டினதும் நமது நாட்டுஜனங்கள் அதில் உடனே குடி போகாமல் வீட்டை ஆறப்போட வேண்டும் என்றுசொல்லிக் கொஞ்ச மாதங்கள் அவ்வீட்டிற் குடிபுகாமல் நிறுத்துகின்றார்கள். இதைப் பார்த்தாற் கொஞ்ச காலத்திற்குப்பிறகு புது வீட்டில் வசித்தாற்றான் தேக சௌக்கியத்துக்குக் குறைவு வராது, என்ற உண்மையை இவர்கள் ஒருவாறு உணர்ந்தவர்களாகவே தோன்றுகிறது.

இரண்டாம் அதிகாரம்.—நீர்.

Chapter II.—Water.

ஆறில்லா ஊர் பாழ், என்று நமது நாட்டில் வழங்கும் பழமொழிக்குச் சரியான அருத்தம் ஓர் ஊரின் சௌக்கியத்துக்கு மிகுதியான நல்ல ஜலம் அவசியமாக வேண்டும் என்பதேயாம். நல்ல ஜலம் நமது உபயோகத்துக்கு வேண்டியவளவு கிட்டாமற்போனாலும் நமக்குக்கிடைக்கும் ஜலம் அசுத்த ஜலமாகவிருந்தாலும் அக்காரணங்களால் நமது சௌக்கியத்துக்கு விளையும் தீமைகளவேயில்லை. ஆகையால் சுகசந்தர்சன விதிகளில் நல்ல ஜலம் என்னும் விஷயத்தைப்பற்றி நாம் வெகு விவரமாக எழுதக்கடமைப்பட்டிருக்கின்றோம். ஜலத்தின் குணம், அதைக் கட்டி வைக்கும் வகை, அதை நாம் உபயோகிக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளும் பிரயாசை, பரிசுத்தமான ஸ்தலத்திலிருந்து ஜலம் நமது உபயோகத்துக்குக்கிட்டுகின்றதா என்ற பலவிதமான விஷயங்கள் இவைகளைப்பற்றி நாம் பரிசோதிக்கவேண்டும். நமக்கு அருந்துவதற்கும், உணவுகளைச் சமையல் செய்வதற்கும், நித்திய கர்மங்களை நடத்துவதற்கும், துணிகளையும் பாத்திரங்களையும் துலக்குவதற்கும், நமது மாடுகள், குதிரைகள் முதலியவைகளைக் குளிப்பாட்டுவதற்கும், வீடுவாசல்கள், சாக்கடை முதலியவைகளைக் கழுவுவதற்கும் இன்னும்

பலவித உபயோகங்களுக்கும் ஜலம் அவசியம் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்.

வைத்திய சாஸ்திரப் பிரகாரம் சாதாரணமாக ஒவ்வொருவனுக்கும் அவன் சௌக்கியமாயிருக்க ஒரு நாளைக்குக் குறைந்த பட்சம் 5-பையின்டு (100 ஔவுன்ஸ்) அதாவது ஐந்து சீசா ஜலம் வேண்டும். இதில் மூன்றிலொரு பாகம் அதாவது ஏறக்குறைய 2 சீசா ஜலம் அவன் தான்புசிக்கும் ஆகாரத்திலேயே உட்கொள்ளுகின்றான் என்றும், மற்ற மூன்றுசீசா ஜலம் எப்படியாவது நீராகவோ அல்லது நீர் உருவமாகிய ரசம், மோர், காபி முதலிய ரூபமாகவோ அவன் உட்கொண்டே தீரவேண்டும் என்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இதல்லாமல் அவன் குளிக்க, பாத்திரங்கள் துலக்க, இன்னும் மற்றக் காரியங்கள்செய்ய இவைகள் எல்லாவற்றிற்கும் ஒருவிதக் கணக்கு ஏற்படுத்திச் சில வைத்திய சாஸ்திரிகள் ஒரு மனிதனுக்குத் தேவையான ஜலம் இவ்வளவென்று பின் வருமாறு குறித்திருக்கின்றார்கள்.

சமைக்க	$\frac{3}{4}$	காலன்
அருந்த	$\frac{3}{8}$	,,
குளிக்க, அனுஷ்டானம்செய்ய	5	,,
பாத்திரம், வீடு துலக்க	3	,,
துணி துலக்க	3	,,
சாக்கடை கக்கஸ் இவைகளைக்கழுவ	12	,,
மாடு குளிப்பாட்ட	6	,,
குதிரை குளிப்பாட்ட	6	,,

இவ்வாறு குறித்துச் சென்னைபோன்ற ஒரு பெரிய பட்டணத்துக்கு ஜனத்தொகையைக் கணக்கிட்டு சராசரி ஆளுக்கு 20-காலன் ஜலம் ஒரு நாளைக்கு வேண்டியிருக்கலாம் என்று ஒருவிதக் கணக்கை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இவ்வாறு ஒருகணக்குண்டாகித் தான் அதன் பிரகாரம் நமது சென்னை முதலான நகரங்களிற் குழாய்வழியாக நமக்குக்கிடைக்கவேண்டிய ஜலத்துக்கு ஒரு ஜலாசயத்தையும் அதிகாரிகள் உண்டாக்குகின்றார்கள்.

ஜலத்தின் சங்கிரகணம் இயல்பாகவே பூமியிலிருக்கும் சில பள்ளங்களிலிருந்தும் அல்லது பல சிற்றாறுகள் ஒன்றுகூடி உண்டான நதிகளிலிருந்தும் நமக்குக் கிடைக்கின்றது. இவ்வாறு இயல்பாக உண்டாகும் நீரை ஓரிடத்திற் சேர்க்கவேண்டியிருந்தால் சேர்த்துவைத்துப் பெரிய ஊர்களுக்கு உபயோகமாகும்படி சில வேளைகளில் அதிகாரிகளும் நாட்டார்

உ

கடவுள் துணை

தொல்காப்பியம்

பொருளதிகாரம்

அ.—செய்யுளியல்

நச்சினார்க்கினியருரை.

க. மாத்திரை யெழுத்திய லசைவகை யெனாஅ
யாத்த சீரே யடியாப் பெனாஅ
மரபே தூக்கே தொடைவகை யெனாஅ
நோக்கே பாவே யளவிய லெனாஅத்
திணையே கைகோள் கூற்றுவகை யெனாஅக்
கேட்போர் களனே காலவகை யெனாஅப்
பயனே மெய்ப்பா டெச்சவகை யெனாஅ
முன்னம் பொருளே துறைவகை யெனாஅ
மாட்டே வண்ணமொ டியாப்பியல் வகையி
னாறுதலை யிட்ட வந்நா லைந்து
மம்மை யழகு தொன்மை தோலே
விருந்தே யியைபே புலனே யிழைபெனப்
பொருந்தக் கூறிய வெட்டொடுந் தொகைஇ
நல்லிசைப் புலவர் செய்யு ளுறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே.

என்பது சூத்திரம். இவ்வோத்து செய்யுளது இலக்கணம் உணர்த்தினமையிற் செய்யுளியல் என்னும் பெயர்த்து: எனவே இவ்வோத்துநுதலியது செய்யுளிலக்கணமாயிற்று. பாயிரத்துள் 'வழக்குஞ் செய்யுளு மாயிரு முதலி, னெழுத்துஞ் சொல்லும் பொருளும் ஆராய்வல்' என்றமையான் இதற்கு முன்னர்க்கூறிய அதிகாரங்களிலும் இவ்வதிகாரத்தும்எல்லாம் வழக்கிற்குஞ் செய்யுட்கும் வேண்டுவனகூறி, அவ்விரண்டும்பற்றிச் செய்யுள்

நிகழுமாதலால் அச்செய்யுட்குரிய இலக்கணத்தையெல்லாம் இவ்வோத்தினுட் டொகுத்துக் கூறுகின்றார் என்றுணர்க. இங்ஙனங்கூறவே, முற்கூறிய ஓத்துக்களோடு இயைபுடைத்தாயிற்று.

இவ்வோத்தினுள் இத்தலைச்சூத்திரம்;—இவ்வோத்தினுள் மேற்கூறுகின்ற செய்யுட்கு உறுப்பாவன இவையென்று அவற்றது பெயரும் முறையும் தொகையும் கூறுகின்றது.

இதன் பொருள். மாத்திரையென்றது எழுத்திற் குரித்தாக எழுத்ததிகாரத்தோதிய மாத்திரைகள் தத்தம் அளவின் இறந்து பாவின் ஓசை வேறுபாடுகளையுணர்த்தி விராஅய் நிற்கும்நிலையை: மாத்திரையென்றது மாத்திரையளவை என்பதூஉம், எழுத்தியல் என்றது எழுத்தியல்வகையை என்பதூஉம் மேலைச்சூத்திரத்தாற் பெறுக. எழுத்தியல் வகையென்றது எழுத்ததிகாரத்துக் கூறிய எழுத்துக்கள் செய்யுட்கியலும் வகையை. அசைவகையென்றது இயலசையும் உரியசையும் என இருவகையாம் அசைக்கூறுபாட்டினை. யாத்தசீர் என்றது பொருள்பெறத் தொடர்ந்து நிற்குஞ் சீரை: எனவே அசையும் தனித்தனியே பொருள்பெறுவனவும் தனித்தனிப்பொருளின்றிச் சீராயவழிப் பொருள்பெறுவனவும் என இருவகையாம்; தேமா சாத்தன் எனவரும். அடியென்றது அச்சீர் இரண்டும்பலவுந்தொடர்ந்ததோருறுப்பை. யாப்பென்றது அவ்வடிதொறும் பொருளேற்றுநிற்பச் செய்வதோர் செய்கையை. மரபென்றது காலந்தொறும் இடந்தொறும் வழக்குத் திரிந்தவாற்றுக்கேற்ப வழுப்படாமற் செய்வதோர் முறைமையை. தூக்கென்றது பாக்களைத் துணித்து நிறுத்தலை. தொடைவகையென்றது எழுத்துச்சொற் பொருள்களை எதிரெதிர்நிறீஇத்தொடுக்கின்ற தொடைப்பகுதிகளை. நோக்கென்றது மாத்திரை முதலிய உறுப்புக்களையுடைத்தாய்க் கேட்போர்க்கு நோக்குதல்படச் செய்தலை. நோக்குதல் - பயன்கோடல். பாவென்றது இவ்வுறுப்புக்களையுடைத்தாய்ச் சேட்புலத்திருந்து சொல்லும் பொருளுந் தெரியாமல் ஒருவன்கூறியவழியும், இஃது என்னசெய்யுளென்றறிவதற்கு எதுவாகிப் பரந்துபடச் செய்வதோரோசையை. அளவியல் என்றது அடிவரையறையை. திணையென்றது அகத்திணையும் புறத்திணையும் அறியச்செய்தலை. கைகோள் என்றது அவ்வத்திணையொழுக்கம் அறியச் செய்தலை. கூற்றுவகையென்றது அச்செய்யுட்கேட்டோரை இது கூறுகின்றோரின்னோரென அறிவித்தலை. கூற்றிவை என்பது பாடமாயின் அஃது எண்ணிய மூன்றினையுந் தொகுத்ததாம். கேட்போர் என்றது இன்னோர்க்குக்கூறுகின்றது இதுவெனத் தெரித்தலை. களனென்றது இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்பாடும் முதலியன உணரச்செய்தலை. காலவகையென்றது முக்காலத்தும் திணைநிகழ்ச்சிக்கண்ணே பொருணிகழ்ச்சியுணரக்

கூறலை. பயனென்றது சொல்லிய பொருளாற் பிறிதொன்று பயப்பச்செய்தலை. மெய்ப்பாடென்றது சொற்கேட்டோர்க்குப் பொருள் கட்புலனாதலை. எச்சவகை யென்றது சொல்லப்படாத ஒழிபும் தழீஇக்கொள்ளச்செய்தலை: அது கூற்றும் குறியும் எனவருதலின் வகையென்றார். முன்னமென்றது கூறுவாரையும் கூறக்கேட்டோரையும் குறிப்பான் எல்லாரும் கருதும்படி செய்தலை. பொருள் என்றது புலவன் றான்றோற்றிக்கொண்டு செய்வதோர் பொருண்மையை. துறைவகை யென்றது முதலுங் கருவும் முறைபிறழ்ந்தாலும் இஃது இதன்பாற்படுமென்று ஒருதுறைப்படுத்தற்கேதுவாயதோர் கருவியுளதாகச் செய்தலை. மாட்டென்றது அகன்றும் அணுகியுங்கிடந்த பொருள்களைக் கொண்டுவந்து தொடராகக் கூட்டி முடித்தலை. வண்ணமென்றது ஒருபாவின்கண்ணிகழும் ஓசை விகற்பத்தை. எனாஅ என்ற எல்லாம் எண்ணிடைச்சொல். ஏகாரங்கள் எண்ணுப்பொருட்டு. யாப்பியல் வகையி னாறுதலையிட்ட அந்நாலைந்தும் என்றது யாப்பிலக்கணப் பகுதியால் அவ்வண்ணத்தொடு கூறிய இருபத்தாறும் எ-று. அம்மை........ வகுத்துரைத்தனரே என்றது அம்மைமுதலிய எண்வகை வனப்பொடும் முற்கூறிய இருபத்தாறுந்தொகுத்து முப்பத்துநான்குறுப்பாக்கி இம்முப்பத்துநான்கும் நல்லிசைப்புலவர் செய்யப்படுஞ்செய்யுட்கு உறுப்பாமென்று கூறி, அங்ஙனம் இலக்கணமே கூறிவிடாதே அவற்றைத்தாஞ் செய்தல் வன்மையினமைந்து சுவடுபட வகுத்த அவ்வத்துறையெல்லாம் போயினார் என்றவாறு.

செய்யுளுறுப்பெனக்கூறி வல்லிதின் வகுத்துரைத்தனரென மாறுக. இருபத்தாறுஎன்றும் எட்டுஎன்றும் இருவகையாற் றொகைகூறியது, இருபத்தாறும் தனிநிலைச் செய்யுட்கு ஒன்றொன்றனை இன்றியமையாவாய் வருதலும், அவ்வெட்டும் பல செய்யுட்டொடர்ந்த தொடர்நிலைச்செய்யுட்கே பெரும்பான்மையும் உறுப்பாய்வருதலும், தனிநிலைக்கண் ஒரோவொன்றாயும் வருதலும் அறிவித்தற்கு என்க. இவ்வுறுப்புக்குறையாமற் செய்யுட் செய்வார் நல்லிசைப்புலவர் என்பதூஉம், அடிவரையறை கூறியவற்றிற்கே இவ்விலக்கணமென்பதூஉம், * அடிவரையறையில்லா நூன்முதலிய ஆறற்கும் திணைமுதலிய உறுப்பு ஆகா என்பதூஉம், அவற்றுள் நூலும் உரையும் ஒழிந்த நான்கும் செய்தார் இசைப்புலவராகார் என்பதூஉம் உணர்க. இனி நூலும் உரையும் செய்தாரும் நல்லிசைப்புலவர் என்பது பின்னர் அவற்றிற் கிலக்கணம் கூறும்வழி யுணர்க. உறுப்பெனவே உறுப்புடைச் செய்யுளும் அதன்கண் அடங்கும், உறுப்பினது ஈட்டம் முதலாதலின்.

---

* 'அடிவரை யில்லன வாறெனமொழிப' 'அவைதாம், நூலி னான வுரை யினான......குறிப்பினான' என்பனவற்றானுணர்க.

இவ்வாசிரியர் தளையை உறுப்பாகக் கொள்ளாத தென்னையெனின்:— தளையாவது சீரினது தொழிலாய்ப் பாக்களின் ஓசையைத்தட்டு இருசீரிணைந்ததாகும்; அவ்வாறிணைந்த இருசீரினையும் ஆசிரியரெல்லாம் இருசீர்க்குறளடியென அடியாகவே வகுத்துக்கொண்டாராதலின் தளையென வேறோருறுப்பின்றாம். அன்றியும், தளையான் அடிவகுப்பாரும் உளராயினன்றே அதனை உறுப்பென்று கொள்ளவேண்டுவது; அங்ஙனம் வகுத்துக்கொள்ளாமையின் உறுப்பென்னாது சீரது தொழிலாய் ஓசையைத்தட்டுநிற்பதொன்றென்றே கொண்டார். அதனை யுறுப்பென்பார்க்குச் சீரான் அடிவகுத்தல் குற்றமாம். **தொல்காப்பியரோடு ஒருசாலைமாணுக்கராகிய காக்கைபாடினியாரும்** உறுப்பென்னார் ; **பின்றோன்றிய காக்கைபாடினியார்** முதலியோர் கொள்வர்: அது பொருந்தாது.

இச்சூத்திரத்துட் கூறிய முறையே முறையாமாறு வருகின்ற சூத்திரங்களின் பொருட்கிடையான் உய்த்துணர்க. வனப்பெட்டும் தனித்தனி வருமாறும் தம்முள் இயைபுடைமையும் ஆண்டுணர்க. இவ்வுறுப்பினை ஆசிரியன்குறியும் உலகத்தார்குறியுமாகக் கொள்க. இவற்றை உயிரில்லாத கலவையுறுப்புப்போற் கொள்க. (க)

உ. அவற்றுண்

மாத்திரை யளவு மெழுத்தியல் வகையு
மேற்கிளந் தன்ன வென்மனார் புலவர்.

இது நிறுத்தமுறையானே மாத்திரையும் எழுத்தியலும் உணர்த்துகின்றது.

இ-ள். அவற்றுள் மாத்திரையளவும் என்பது முற்கூறியவற்றுள் மாத்திரையைச் செவிகருவியாக உணர்ந்துகொள்ளும் நிலையும். எழுத்தியல் வகையும் என்பது முற்கூறிய முப்பத்துமூன்றெழுத்தும் யாப்பிலக்கணத்திற்குப் பதினைந்துபெயரவாய் நடக்குங் கூறுபாடும். மேற்கிளந்தன்ன என்மனார் புலவர் என்பது எழுத்தோத்திற்கூறிய இலக்கணத்திற் பிறழாமை வருமென்று கூறுவர் புலவர். எ-று.

ஈண்டு அளவென்றது ஏழுத்திலக்கணத்தில் எழுத்திற்குக் கூறிய மாத்திரைகள் தத்தம் ஓசைகளைப் புலப்படுத்தி நிற்குமாறு தொடர்புபடுத்திவிராஅய் நிற்பச்செய்யும் நிலையை அளந்துகோடலை: என்றது "அளபிறந் துயிர்த்தலு மொற்றிசை நீடலும்" (தொல்-எழுத்- நூன்- ௩௩) என்னுஞ் சூத்திரத்தானும் "குறுமையு நெடுமையு மளவிற் கோடலின்" (ஷை- ஷை மொழி- ௧௦) என்னுஞ் சூத்திரத்தானும் செய்யுட்குரிய ஓசைதருமெனக்

கூறிய நெட்டெழுத்துக்களும் ஒற்றெழுத்துக்களும் தத்தம் பாவின் ஓசையை வேறுபடத்தந்து நிற்கும் என்றதாம். இவ்விரண்டு சூத்திரத்தோடும் மாத்திரையளவை மாட்டெறிந்தார். 'இவன் அளந்தஅளவு நன்று' என்றாற்போல, அளவு அளவுதொழின்மேனின்றது. இதனாலல்லது செய்யுள் வேறுபாடு உணரலாகாமையிற் சிறப்புறுப்பாக ஏனையுறுப்புக்களின் முன்னே கூறினார். உதாரணம்;—"வருவர்கொல் வயங்கிழாஅய் வலிப்பல்யான் கேஎளினி" (கலி-பாலை-கo) எனவும்; "கடியவே கனங்குழாஅய் காடென்றா ரக்காட்டுள்" (ஷை) எனவும் குற்றெழுத்துக்களெல்லாம் நெட்டெழுத்தினை மாத்திரைமிகுத்து விராஅய் நின்றவாறு காண்க. "குரங்குளைப் பொலிந்த கொய்சுவற் புரவி" (அகம்-ச) "பிடியூட்டிப் பின்னுண்ணுங் களிறெனவு முரைத்தனரே" (கலி-பாலை-கo) எனக்குற்றெழுத்துக்களெல்லாம் இடையினின்ற ஒற்றெழுத்துக்களை மாத்திரை மிகுத்து விராஅய் நின்றவாறு காண்க. இதுவும் எழுத்திற்சூத்திரங்களிரண்டும்* ஆணை கூறிற்று.

இனி எழுத்து முப்பத்துமூன்றனுட் சில எழுத்துக்களை உயிர் என்னும் பெயர்கொடுத்து அவற்றைக் குறிலும், நெடிலும், அளபெடையும், குற்றியலிகரமும், குற்றியலுகரமும், ஐகாரக்குறுக்கமும், ஔகாரக்குறுக்கமும் எனப் பெயர்வேறுபாடு கொடுத்து அதனோடு எட்டாக்கியும், சிலஎழுத்துக்களை மெய்என்னும் பெயர்கொடுத்து அவற்றை மெல்லினமும், வல்லினமும், இடையினமும், ஆய்தமும், ஒற்றளபெடையும் எனப் பெயர்வேறுபாடுகொடுத்து அதனோடுஆறாக்கியும், இவையிரண்டுங் கூடியவற்றை உயிர்மெய் எனவேறோர் பெயராக்கியும் மேற்கூறியவாறே †பதினைந்து பெயரவாய் ஈண்டுநடக்குமென்றற்கு எழுத்தியல்வகையென்றார். இவ்வெழுத்தினை எழுத்தினுட்கூறிய சூத்திரங்களோடு மாட்டெறிந்தார். அவை 'ஔ

---

* 'அளபிறந்துயிர்த்தலும்' 'குறுமையுநெடுமையும்' என்னுமிரண்டும். இவர் இவ்வெழுத்ததிகாரச்சூத்திரங்களிரண்டும் எதிரதுபோற்றலென்னும் உத்திபற்றி இச்செய்யுளியற்சூத்திரத்தை நோக்கிக்கூறியன எனக்கொண்டு, ஈண்டைக்குரைத்தாங்கு அவற்றிற்கும் உரைத்து, இவ்வுதாரணங்களையே ஆண்டும் எடுத்துக்காட்டுதல் காண்க.

† "இவற்றோடு மகரக்குறுக்கமுங் கூட்டிப் பதினேழெழுத்தென்பாருமுளர். அதனாற் பயனென்னையெனிற், பாட்டுடைத்தலைவன் கேட்டுக்குக் காரணமாமென்பர்" என்றார் பேராசிரியர். அளபெடையை யொன்றாக எண்ணி மகரக்குறுக்கத்தைக்கூட்டிப் பதினைந்தெனவேகொண்டார் யாப்பருங்கலநூலார். (எழுத்தோத்து-உ)

கார விறுவாய்' (தொல்-எழுத்-நூன்-அ) 'அ, இ, உ, எ' (ஷ-௩) 'ஆ, ஈ ஊ, ஏ' (ஷ-௪) 'நீட்டம் வேண்டின்' (ஷ-௬) 'அவைதாங், குற்றியலிகரம்' (ஷ-௨) 'ஓரள பாகு மிடனுமா ருண்டே' (ஷ மொழி ௨௪) 'வல்லெழுத்தென்ப' (ஷ-எழுத்-௧௯) 'மெல்லெழுத்தென்ப' (ஷ-௨௦) 'இடையெழுத்தென்ப' (ஷ-௨௧) 'உயிர்மெய்யல்லன' (ஷ-மொழி-௨௭) என்பனவாம். அளபெடையிரண்டும் எழுத்தாந்தன்மை * மேலே பெறுதும். இவற்றுட் குறிலும் நெடிலும் குற்றுகரமும அசைக்குறுப்பாம். ஒற்றடுத்த அசைகள் வேறுபடாமையின் ஒற்று அசைக் குறுப்பாகா: ஒற்றளபெடைக்குறுப்பாம். நெடிலும், அளபெடையிரண்டும், உயிரும், உயிர்மெய்யும், மூவினமும், ஐகார ஔகாரக்குறுக்கமும் தொடைக்குறுப்பாம். குறிலும், நெடிலும், அளபெடையிரண்டும், மூவினமும், ஆய்தமும் வண்ணத்திற்குறுப்பாம். இவற்றை இயற்கையெழுத்துஞ் சார்பெழுத்தும் என இரண்டாகவும் வருப்பர்.† (௨)

௩. குறிலே நெடிலே குறிலிணை குறினெடி
லொற்றொடு வருதலொடு மெய்ப்பட நாடி
நேரு நிரையு மென்றிசிற் பெயரே.

இது நிறுத்த முறையானே அசை கூறுகின்றது.

இ-ள். குறிலும் நெடிலும் தனித்துவந்தும், குறிலிரண்டு இணைந்துவந்தும், குறிற்பின்னர் நெடிலிணைந்துவந்தும், பின்னர் இந்நான்கும் ஒற்றொடு வருதலோடே பொருள்பெற ஆராய்ந்து நிரனிறை வகையான் நேரசையும் நிரையசையும் என்று பெயர்கூறினர் ஆசிரியர். எ-று.

குறிலும் நெடிலும் தம்முண் மாத்திரையொவ்வாவேனும் அவற்றின் மாத்திரையை நோக்காது எழுத்தாந்தன்மைநோக்கி இரண்டற்கும் ஒரோவோரலகு பெறுமென்றார். இதுகுறிலிணைக்குங் குறினெடிற்கும் ஒக்கும். நேரசை நிரையசை என்ற பெயர், ஆட்சியும் குணமும் காரணமாகப் பெற்ற பெயர். இரண்டெழுத்தானாகாது ஒரெழுத்தானாதலின் நேரியதன்றே: அதனான் நேரியஅசை நேரசை என்றாயிற்று. 'உயிரிலெழுத்துமெண்ணப் படாஅ' (தொல்-செய்-௪௪) என்றலின் ‡எண்ணப்படாத ஒற்

* செய்யுளியல் - ௧௭,௧அ.

† சிறப்பெழுத்து உறுப்பெழுத்து எனத்தொகையும் செய்வர் **யாப்பருங்கலவிருத்திகாரர்.**

‡ 'எண்ணுப்படாத' எனவும் பிரதிபேதம்.

றுக்கள் பயன்படாது அசைந்துநிற்றலின் அசையென்னும் பெயரும் எய்திற்று. இரண்டெழுத்துநிரைதலின் இணையசையென்னும் பொருள்பட நிரையசை யென்றாயிற்று*.

உதாரணம்;—அ, ஆ, அல், ஆல் எனவும், பல, பலா, புகர், புகார் எனவும் வரும். ஒற்றுக்கள் எழுத்தாய் நின்று அலகுபெறுதற் குரியவல்லவென்பது **மொழி மரபின்**கண்ணே 'மொழிப்படுத் திசைப்பினும்' (உ௦) என்பதன்கட் கூறியவாற்றானுணர்க. குறில் நெடில் என எழுத்தாக ஓதிற்றேனும் 'நெட்டெழுத் தேழே யோரெழுத் தொருமொழி' (ஷை-க௦) என்றதனால் நெடில் சொல்லாந்தன்மையும் 'குற்றெழுத் தைந்து மொழிநிறை பிலவே' (ஷை-கக) என்றதனாற்குறிலும் †சிறுபான்மைசொல்லாந்தன்மையும்பெறுதும்; அன்றியும் ஒற்றுக் கூறினமையானும் பெறுதும். 'உள்ளார் தோழி' என நேரசைநான்கும் 'வரி வரால் கலா வலின்' எனநிரையசை நான்கும் வந்தன. (௩)

ச. இருவகை யுகரமொ டியைந்தவை வரினே
நேர்பு நிரைபு மாகு மென்ப.

இது கூறாத அசைக்கூறுங் கூறுகின்றது.

இ-ள். இருவகை உகரமொடு என்பது குற்றுகர முற்றுகரங்களோடே அவையியைந்துவரின் எ-து மேற்கூறிய நேரசையும் நிரையசையும் பிளவுபடாது ஒருசொல்விழுக்காடுபட இயைந்துவரின். நேர்பும் நிரைபும் ஆகுமென்ப எ-து நிறுத்தமுறையே நேரசையோடியைந்த குற்றுகரமும் அதனோடியைந்த முற்றுகரமும் நேர்பசை எனப்படும்: நிரையசையோடு இயைந்த குற்றுகரமும் அதனோடியைந்த முற்றுகரமும் நிரைபசை எனப்படும். எ-று.

நேரின்பின் உகரம்வருதலின் நேர்பு: நிரையின்பின் உகரம் வருதலின் நிரைபு என ஆட்சியும் குணமும் காரணமாகப்பெற்ற பெயராதல் மேற்கூறியவற்றுட்காண்க.

---

* "இனி நேரசைநிரையசைகளைத் தனியசை, இணையசை என்பாருமுளர்: என்னை? 'தனியசை யென்று மிணையசை யென்று, மிரண்டென மொழிப வியல்புணர் தோரே' என்றார் காக்கைபாடினியார்" என்பது **யாப்பருங்கலவிருத்தி.** (அசையோத்து-க)

† 'குற்றெழுத்தைந்தும்' என்புழி முற்றும்மை எச்சப்பட்டுநின்றதெனக்கொண்டு தாமே நிறைந்துநின்று மொழியாதலில; சிலமெய்யொடு கூடி நிறைந்துநின்று மொழியாம் எனவுரைப்பர்.

உ-ம். வண்டு, நாகு, காம்பு, மின்னு, நாணு, தீர்வு: நேரசைமூன்றன் பின்னும் இருவகை உகரமும் வந்து நேர்பசையாயிற்று. குறிற் பின்வரும் இருவகையுகரமும் நேர்பசையாகாமை *மேற்கூறுகின்றார். வரகு, குரங்கு, மலாடு, மலாட்டு, இரவு, புணர்வு, உலாவு என நிரையசைநான்கின் பின்னர்க்குற்றுகரமும், நிரையசைமூன்றின்பின்னர் முற்றுகரமும் வந்து நிரைபசையாயிற்று. குறிநெடி லொற்றின்பின் வந்த முற்றுகரம் உளவேற்காண்க.† 'குற்றிய லுகரமு மற்றென மொழிப' (தொல்-எழுத்-புணரி-ங) என்ற விதியாற் குற்றுகரம் புள்ளிபெற்றுநின்றும் புள்ளிபெற்றஒற்றுப்போன்று ஒடுங்கிநில்லாது தன்னான் ஊரப்பட்டமெய்யுந்தானும் அரைமாத்திரைத்தாய்நின்றதேனும், அகன்றிசைத்தலின் ஒற்றென்றலுமாகாது ஒருமாத்திரை பெற்ற உயிர்போல அகன்றிசையாமையின் உயிரென வேறோரலகுகொடுத்தலுமாகாது இதனைச்செயற்பாலதுவேறோரசையாக்குதலென நோக்கி நேர்பசை நிரைபசை என வேண்டினார் ஆசிரியர். பின்னுள்ளோர் அலகு பெறுமென்று கொண்டாரேனும் அவர்க்கும் அலகுபெறாவென்றுங் கொள்ளவேண்டியவாறும், தேமா, புளிமாவொழியக் காசு, பிறப்பு எனக்குற்றுகரவீறாக வேறுதாரணங்கொள்ளவேண்டியவாறும் உணர்க; எனவே குற்றுகரம் அலகுபெறாவாயிற்று. வண்டு, கொண்டி என ஓசை ஒவ்வாமை செவிக்கருவியாக உணர்க.

ஒரு மாத்திரைபெற்ற முற்றுகரம் நேர்பசை நிரைபசையாமோவெனின்;—வண்டு வண்டு வண்டு வண்டு என்புழிப் பிறந்தஅகவலோசை மின்னு மின்னு மின்னு மின்னு என்புழியும்பெறப்படுதலானும், வெண்பாட்டீற்றடி வண்டுஎனக் குற்றுகரவீற்றானின்றுழியுங் ‡கோலு என முற்றுகர வீற்றானின்றுழியும் ஒத்தவோசையவாமாகலானும் அவ்வசைகளாயிற்று. இஃது 'எழுத்தளவெஞ்சினும்............மொழிப' (செய்-சஉ) என்ற விதியாற் பெறுதும். (ச)

* செய் - ரு.

† 'முற்றுகரம் இரண்டசைப்பின்னும் வருங்காற் குறிலொற்றின்பின்னும் நெடிற்பின்னும் என நேர்பசைக்கு இரண்டல்லதாகாது. நிரைபசைக்கண்ணும் குறிலிணைப்பின்னும் குறினெடிற்பின்னுமல்லதாகாது. உதாரணம்—மின்னு, நாணு எனவும்,உருமு,குலாவுஎனவும்வரும். வாழ்வு, தாழ்வு என நெடிலொற்றின்பின்னும் முற்றுகரம் வந்ததாலெனின், அவை ஆகா' எனவும், 'இக்காட்டிய நான்குமே ஆவன' எனவும் கூறுவர் பேராசிரியர்.

‡ பேராசிரியர் "முற்றிய லுகர மொழிசிதைத்துக் கொளாஅ, நிற்ற லின்றே யீற்றடி மருங்கினும்' என்பதனுரையில் 'மருங்கு என்றதனால் ஈற்றடிக்கண்ணும் இறுதிக்கண்ணே முற்றுகரம் விலக்குண்டதெனக்கொள்க : என்றார்க்குப் 'புலமலர்த் தாரகலம் புல்லு' எனவும் 'கண்ணாரக் காணக் கதவு' எனவும் வருமாலெனின், அவை மரூஉவழக்கு என்க' எனக்கூறுவர்.

உ

விளம்பரம்.

ஒருமுறை பாருங்கள்.

மதுரை கீழமார்க்கட்டுத்தெருவில் நம்முடைய ஜவுளிமாளிகையில் கொற்நாடு, கும்பகோணம், தஞ்சாவூர், ஆரணி, சேலம் காஞ்சீபுரம், பனுரசு, உள்ளூர் முதலிய தினுசுகளும் பங்காளத்திலிருந்து பலவிதமானநார்ப்பட்டு, வெண்பட்டுதினுசுகளும், நூதனமாய் அச்சிடப்பட்ட புதுச்சேரித்துண்டுகளும்; பற்பல உபயோகமுள்ள நாகரீக ஜவுளிதினுசுகளும்; மொத்தமாகவும் சில்லறையாகவும் கரூர்விலையாக விற்கப்படும். துலை வியாபாரிகளுக்கு ஜவுளிதினுசுகள் வேண்டிய மாதிரியில் உடனேயும் பத்திரமாயும் தபால் வாலியூபேயபிள் மார்க்கமாய் அனுப்பப்படும். சாமான்களின் ஜாப்தா கேட்பவர்களுக்கு இனமாக அனுப்பப்படும்.

கு. தெய்வசிகாமணி பாகவதர்,
டி. லட்சுமண பாகவதர்,

கரூர் ஜவுளிக்கடை மதுரை.

☞ தயவு செய்து தங்களுடைய சிநேகிதர்களுக்கு தெரிவியுங்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்கப் பதிப்பிற்குச் சங்க அங்கத்தினர் செலுத்த வேண்டிய வருட 'சந்தா' ரூ. 6-யும் அன்புற்றனுப்பிய வித்வான்.

---

1. வண்ணக்களஞ்சியம்-காஞ்சி நாகலிங்க முதலியாரவர்கள்.

உ

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில்

விற்கப்பெறும் புத்தகங்கள்

1. ஞானாமிர்தம் மூலமும் உரையும்.

இது ஸ்ரீ கைலாயபரம்பரை நிறைந்தநாயனார் சந்தானத்துப் பரமானந்த முனிவர் அருள்பெற்ற வாகீசமுனிவர் இயற்றியருளியது. மூன்றடிச்சிறுமையும் ஐம்பத்தாறடிப் பெருமையுமுள்ள அகவற்பா எழுபத்தைந்துடையது. வீடுகாதலிக்கும் நல்லறிவினர்க்குச், சிவாகமங்களுட் கூறப்படுவனவாய சரியை, கிரியை, யோகம், ஞானமென்னும் நான்குபாதங்களுள்ளே ஞானபாதத்துக்குரிய பதிபசுபாசங்களி னியல்பை நியாயவாயிலான் உணர்த்தி வீடெய்தும் உபாயங்கூறுவது. சொல்வளம் பொருள்வளங்களாற் கற்போர்நெஞ்சங் காமுறச்செய்வது. ஸ்ரீ கைலாய பரம்பரைத் திருவாவடுதுறையாதீனத்து மாதவச்சிவஞானயோகிகளாற் சிவஞான போதவுரை முதலியவற்றில் மேற்கோள்காட்டப்பெற்றது. இத்தகைச் சிறப்புவாய்ந்த இந்நூல் இதன் பழைய உரையுடன் திருவாவடுதுறையாதீன வித்துவானும், மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமான சேற்றூர்ச் சுப்பிரமணியக் கவிராயரவர்களாற் பலபிரதிகளைக் கொண்டு பரிசோதித்து விசேடக் குறிப்புக்களுடன் அச்சிடப்பெற்று, இப்போது முடிந்துள்ளது. இது சங்கப்பிரசுரங்களுள் முதலாவதாகும். இதன்விலை ரூ 1.

2. சைவமஞ்சரி.

இது மதுரைத்தமிழ்ச்சங்க ஸ்தாபகரும், அக்கிராசனாதிபதியுமான ஸ்ரீமாந் பொ. பாண்டித்துரைத் தேவரவர்களாற் றொகுக்கப்பெற்றது. முன்னர் யாவர்க்கு முபயோகமாகத் தேவரவர்களால் வெளியிடப்பெற்ற 'பன்னூற்றிரட்டு' போல, சைவசமயிகட்குப் பெரிதும் பயன்படுமாறு, கடவுள்வாழ்த்து, பதி, பசு, பாச முதலாய அதிகாரவடைவுடன் இப்போது பிரசுரிக்கப்பெற்றது. அறுபத்தேழு சைவநூல்களினின்று (அஃதாவது 108399 - செய்யுள்களினின்றும்) ஆராய்ந்தெடுக்கப்பெற்ற 1316-செய்யுண்மலர்களுடையது. சமயஞானமுறவிரும்புவோர்க்கும், பிரசங்கிகட்கும், தவறாது கையிலிருந்துகமழத்தக்கது. நூற்குமுன்னும் பின்னும் பல விசேடக்குறிப்புக்கள் அமைந்தது. இத்தமிழ்ச்சங்கத்தின் இரண்டாம் பிரசுரமாவது. இதன் விலை ரூ $1\frac{1}{2}$.

☞ மேலேகாட்டிய புத்தகங்கட்குத் தபால் சார்ஜ் பிரத்தியேகம். இவை பெறவிரும்புவோர் **மதுரைத்தமிழ்ச்சங்கம் மானேஜர்** அவர்கட்கெழுதி வி. பி. பி. மூலம் பெற்றுக்கொள்ளலாம்.